# விடுதலைப்புலிகள்

குரல் : 29 | பங்குனி - சித்திரை 1992 | அன்பளிப்பு: ரூபா 5-00


# சமாதான முயற்சிகளுக்கு

# சிறீலங்கா அரசு கதவடைப்பு

★ புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்ற கோஷம் மீண்டும் கிளப்பப்படுகின்றது.

★ தேசவிரோத தமிழ்க் குழுக்களுடன் சிங்களப் படைத்துறைத் தலைமைகள் சதியாலோசனை.

★ சிங்கள இராணுவ இயந்திரம் புனரமைக்கப்பட்டு, புத்துயிர் ஊட்டப்படுகின்றது.

★ சமாதானத்தை விரும்பும் உலக அமைப்புகளின் விருப்பங்களை அலட்சியம் செய்துவிட்டு, இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்கின்றது.

அண்மைக்காலமாக போரா? சமாதானமா? என்றிருந்த ஒரு குழப்பகரமான அரசியல் நிலைமைக்கு, சிறீலங்கா அரசு தனது செயலகள் மூலம், இப்போது தெளிவாக விடையளித்துக்கொண்டிருக்கின்றது.

சமாதான முயற்சிகளுக்குக் கதவை அடைத்து வைத்து விட்டு, போரைத் தொடர்ந்து நடாத்தத் தேவையான முன்னெடுப்புக்களை அது பகிரங்கமாகவே செய்யத் தொடங்கியுளளது.

கடந்த சில மாதங்களில் வெளிநாட்டு நல்லெண்ணக் குழுக்களும், சிறீலங்காவின் கத்தோலிக்க - கிறிஸ்தவ மத பீடங்களும், உலகப் பத்திரிகையாளர்கள் பலரும் யாழ்ப்பாணம் வந்து எமது பிரதிநிதிளைச் சந்தித்துச் சென்றுள்ளனர். அவர்களிடம், சமாதானத்திற்கான எமது விருப்பத்தைத் தெரியப்படுத்தி அதற்கான பல முயற்சிகளையும் நாம் எடுத்துவருகின்றோம் என்பதையும சுட்டிக்காட்டியிருந்தோம்.

போரை நிறுத்திச் சமாதானத்தை ஏற்படுத்த யார் விரும்பினாலும் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்து, எமது பிரதிநிதிகளையும் சந்தித்துச் செல்லலாம் எனப் பகிரங்கமாகவே நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். அத்துடன், சிறீலங்காவில் இருந்து வந்த கத்தோலிக்க ஆயர் குழுவின் விருப்பத்திற்கிணங்க பௌத்த மதத் தலைவர்கள் உள்ளிட்ட ஒரு சர்வமத பிரதிநிதிகள் குழுவை வரவேற்கவும் நாங்கள் தயாராகவே இருந்தோம்.

ஆனால் எமது நல்லெண்ணத்தை எடுத்துச் சென்ற அப் பிரதிநிதிகளால் சிறீலங்கா அரசைச் சமாதானத்தின் பக்கம் கொண்டுவர முடியவில்லை.

பதிலாக, "புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்" என்ற யதார்த்தத்திற்குப் புறம்பான, வரட்டுத்தனமான பழைய கோரிக்கையினையே சிங்கள அரசியல்வாதிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும் மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் வந்துசென்ற அனைத்து நல்லெண்ணக் குழுக்களும், பத்திரிகையாளர்களும், புலிகள் சமாதானத்தில் நாட்டமுடையவர்களாகவே இருக்கின்றார்கள் என்ற கருத்துப்படவே அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.


ஆனால், புலிகளின் சமாதானச் சமிக்ஞைகளையும் வெளிநாட்டு நல்லெண்ணக் குழுக்களின் வேண்டுகோள்களையும் புறக்கணித்துவிட்டு சிறீலங்கா அரசானது, மணலாற்றிலும் மட்டக்களப்பு, திருக்கோணமலை மற்றும் வன்னியிலும், பாரிய இராணுவ நடவடிக்கைகளை மாறிமாறித் தொடர்ந்து செய்கின்றது.

அந்த இராணுவ நடவடிக்கைகள் சிங்களப் படைகளுக்கு வெற்றியைத்தேடிக் கொடுக்கன்றனவா என்றால், அதுவுமில்லை.

அண்மையில் மணலாற்றில்நடாத்தப்பட்ட 'கட்டுபகர' என்ற இராணுவ நடவடிக்கை, சிங்களப் படைகளுக்குப் படுதோல்வியைக் கொடுத்துள்ளது. அதேபோன்று வவுனியாவில், திருக்கோணமலையில் செய்யப்பட்ட இராணுவ நடவடிக்கைகளும் சிங்கள அரசுக்கு எந்தவித வெற்றியையும் தேடிக்கொடுக்கவில்லை.

( 2 ஆம் பக்கம் பார்க்க )

விடுதலைப் புலிகளினால் மணலாற்றில் கைப்பற்றப்பட்ட பின்உதைப்பற்ற பீரங்கி



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தீர்வை முன்வைப்பது யார்?: அரசா? விடுதலைப் புலிகளா?

## புலிகளின் குரல்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வு காண்பதாயின், அதற்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது யார்? விடுதலைப் புலிகள் இயக்கம் தனது யோசனைகளை முதலில் முன்வைக்கவேண்டும் என வலியுறுத்துகிறது அரசு. ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் அதனைப் பரிசீலனை செய்யத் தயார் என்கிறது, புலிகள் இயக்கம். இந்த முரண்பாடான நிலைப்பாடு இன்று அரசியல் உலகில் ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்ததுடன் சமரச முயற்சிகளிலும் ஒரு மந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தச் சிக்கலான விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை, நாம் இங்கு தெளிவாக எடுத்து விளக்குகிறோம்.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையின் ( தேசிய சுயநிர்ணய உரிமையின் ) அடிப்படையில், தமிழர் தாயகத்தில் ஒரு சுதந்திரமான, இறைமையுடைய தனியரசை அமைப்பதுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் குறிக்கோள். இது உலகறிந்த விடயம். சிங்கள ஆளும் வர்க்கத்திற்கும் இது தெரியாததல்ல.

தனியரசு என்ற குறிக்கோள் புலிகள் இயக்கத்தால் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. நீண்டதும், மிகவும் சிக்கலானதுமான தமிழரது அரசியற் போராட்டங்களின் ஒட்டுமொத்த விளைவாக, முதிர்ந்த முரண்பாட்டு நிலைகளால் எழுந்த வரலாற்றுத் தேவையாக, இந்தத் தனியரசுக் கோரிக்கை பிறந்தது. இந்தக் கோரிக்கையை நடைமுறைச் சாத்தியமாக்கும் ஆற்றலும் செயற்திறனும் பழைய தலைமையிடம் இருக்கவில்லை. இந்த வரலாற்று இடைவெளியை புலிகள் இயக்கம் நிரப்பியது. புலிகளின் தோற்றத்துடன் போராட்ட வடிவம் மாறியது. தன்னாட்சி உரிமைப் போர் முனைப்புற்றது. தமிழரின் சுதந்திர இயக்கம் இரத்தம் சிந்தும் புரட்சிப் போராட்டமாக எழுச்சி வடிவம் கொண்டது.

தமிழீழ மக்களின் தேசிய அபிலாசையாக வரலாற்றுரீதியாக எழுந்த தனியரசுக் கோரிக்கைக்கு ஒரு செயற்பாட்டு வடிவம் கொடுத்து, அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் இலட்சிய உறுதியுடன் புலிகள் இயக்கம் போராடி வருகிறது. எனவே, புலிகள் இயக்கத்தின் அரசியல் இலட்சியம் என்ன என்பதில் எவருக்குமே எந்த ஐயப்பாடும் இருக்கத் தேவையில்லை.

சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கமானது எந்தச் சூழ்நிலையிலும் தமிழருக்கு நீதி வழங்கப் போவதில்லை என்பது, நாம் வரலாற்று ரீதியாகக் கற்றுக்கொண்ட கசப்பான பாடம். ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கிழித்தெறியப்பட்டு, முந்திய தமிழ்த் தலைமைகளுக்கு மாறி மாறி இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகங்களும், எமக்கு நன்கு தெரியும். எனவே பேச்சுக்கள், சமரசங்கள், உடன்பாடுகள் என்ற அரசியல் பொறிகளுக்குள் புலிகள் சிக்கிவிடப் போவதில்லை.

எனினும் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாயின் அரசியல், ராஜதந்திர சதுரங்க ஆட்டங்களுக்கு நாம் முகங்கொடுப்பது, தவிர்க்கமுடியாதது. எமது இலட்சியப் பாதையிலிருந்து சறுக்கி விழாமல், எமது மக்களின் தேசிய நலன்களைப் பேணும் வகையில், எமது போராட்டத்திற்கு உலக அங்கீகாரத்தை வென்றெடுக்கும் நோக்கில் அரசியல், ராஜதந்திர காய்நகர்த்தல்கள் மிகவும் சாதுரியமாகக் கையாளப்படுவது அவசியம்.

எமது விடுதலைப் போராட்டம் உள்நாட்டு வரம்புகளைமீறி, உபகண்ட எல்லைகளைத் தாண்டி, சர்வதேச அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. இலங்கைத் தீவின் பூகோள கேந்திர நிலையும், இந்தியாவின் பிரதேச ஆதிக்க அபிலாசைகளும், உலக முதலாளித்துவத்தின் சந்தை விஸ்தரிப்பு அக்கறைகளும் பின்னிப் பிணைந்ததாக ஒரு சிக்கலான பரிமாணத்தை அடைந்திருக்கிறது. இதனால், எமது மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைப்பதில் பல இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். இந்தச் சவாலையும் நாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஒரு நியாயமான அரசியற் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு புலிகள் இயக்கம் கதவடைக்கக் கூடாது என்பதும், பிரிந்து செல்வதென்ற இறுதியான கட்டத்தை அடைவதற்கு முன்னர் சமரசத் தீர்வுக்கான சகல வாய்ப்புக்களையும் வழிமுறைகளையும் புலிகள் பயன்படுத்த வேண்டும் என்பதும், சர்வதேச சமூகத்தின் விருப்பமாகும். இந்த அடிப்படையில் உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீது ராஜரீக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. தனியரசுக்கு மாற்றுத் திட்டமாக ஒரு உருப்படியான சுயாட்சியமைப்பைப் பெற்றுக் கொள்வதன் சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும், மேற்குலகம் நிர்ப்பந்தித்து வருகிறது. அதே சமயம் தமிழருக்கு நீதி வழங்க சிங்கள அரசு மறுத்து, அடக்குமுறை தீவிரமாகி, இரு தேசிய இனங்களும் ஒன்றுபட்டு வாழமுடியாத நிலை தோன்றி, அரசியற் தீர்வு சாத்தியமாகாத நெருக்கடி எழுமானால் உலக சமுதாயத்தின் ஆதரவு தமிழர் சார்பாகத் திரும்பலாம். இதனை உலக நாடுகள் மறைமுகமாக, சூசகமாக சுட்டிக்காட்டத் தவறவில்லை.

நீண்ட காலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் கொடூர ஒடுக்குமுறைபற்றியும், இராணுவ அடக்குமுறை பற்றியும், அரசியல் தீர்வு காணும் விவகாரத்தில் சிங்களப் பேரினவாதம் கடைப்பிடித்துவரும் விட்டுக்கொடாத போக்குப்பற்றியும், சர்வதேச சமூகம் நன்கறியும். அப்படியிருந்தும் ஒன்றுபட்ட இலங்கையின் கீழ் ஒத்திசைவான அரசியற் தீர்வு ஏற்படும் சாத்தியங்கள் இருப்பதாக மேற்குலகம் நம்புகிறது. இந்தப் போலி நம்பிக்கையின் அடிப்படையில், தனது வர்த்தக நலன்களை மட்டும் கருத்திற்கொண்டு, இரு தரப்புமீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்கிறது.

இந்தச் சர்வதேச புறநிலை நிர்ப்பந்தங்களைக் கருத்திற் கொண்டுதான் எமது அரசியல் அணுகுமுறை நெறிக்கப்பட்டிருக்கின்றது. சிங்கள ஆளும் வர்க்கமும் அதற்குப் பக்கபலமாக நிற்கும் பேரினவாத சக்திகளும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்போவதில்லை என்பதையும், நியாயமான தீர்வுக்கு இணங்கப்போவதில்லை என்பதையும், நாம் தொடர்ந்து உலகிற்கு எடுத்துக்காட்டி வரவேண்டும். தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் சிங்கள ஆட்சியாளர்கள் தயாரில்லை என்பதை உலகிற்குத் தொடர்ந்து உணர்த்துவதன் மூலமே, எமது தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு நாம் உலகத்தின் ஆதரவைத் திரட்ட முடியும். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில்தான் புலிகள் இயக்கம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது; சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கும் தயாராக இருக்கிறது; அரச தரப்பிலிருந்து உருப்படியான ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால், அதனைப் பரிசீலனை செய்யவும் தயாராக இருக்கிறது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து ஆளும்கட்சியோ எதிர்க்கட்சியோ இதுவரையும் எதுவித தீர்வுத் திட்டத்தையும் முன்வைப்பதற்குத் துணியவில்லை. அப்படி ஒரு தீர்வை முன்மொழிவதும் அவர்களது நோக்கமல்ல. தமிழரைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு முற்போக்கான திட்டத்தை முன்வைத்து சிங்களப் பேரினவாத சக்திகளைப் பகைத்துக் கொள்ளவும், அவர்கள் தயாராக இல்லை. தமிழர்களுக்கு உரிமை மறுப்பதே சிங்களத் தேசப்பற்று எனக் காலங்காலமாக இனத் துவேச அரசியலை நடத்தியவர்கள், இப்பொழுது தமிழர்களுக்கு நீதி வழங்குவது எப்படி?

தமிழரின் இனப் பிரச்சினையை இழுத்தடிப்பதற்காக 1983 ஆம் ஆண்டு இறுதியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு, குழந்தைப்பருவத்திலேயே இறந்து போனது. அதன் வாரிசாக, 1989இல், மீண்டும் மறுபிறப்பு எடுத்த இன்னுமொரு சர்வகட்சி மாநாடு செயலிழந்து, செத்துப் போகும் தறுவாயில் இருக்கிறது. இந்த நிலையில் இன்னுமொரு சர்வகட்சிக் கூட்டாக, பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. தமிழர் பிரச்சினையை ஆராய்ந்து தீர்வு ஒன்றைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, தமிழர் தாயகத்திற்கு வருகைதந்து தமிழரின் நிலையை நேரில் கண்டறிய மறுக்கிறது. கொழும்பிலிருந்து ஆராய்ச்சியை நடத்திக்கொண்டிருக்கும் இந்தக் குழு, விடுதலைப் புலிகளிடமிருந்து தீர்வுத் திட்டம் ஒன்றை எழுத்தில் கேட்கிறது.

இந்த நிலையில் யார் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்ற கேள்வி எழுகிறது.

தமிழருக்கு அநீதி இழைத்தவர்கள்தான், உரிமை மறுத்தவர்கள்தான், தமிழருக்கு நீதியும் உரிமையும் வழங்க முன்வரவேண்டும்; ஒரு தீர்வை முன்வைக்கவேண்டும்.

தமிழரின் உரிமைக்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகளிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லாமலில்லை. தமிழீழத் தனியரசுதான் அந்தத் தீர்வு. இந்தத் தீர்வைச் சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அப்படியானால், மாற்றுத் தீர்வை முன்வைப்பது அவர்களது கடப்பாடு ஆகும். அப்படி வைக்கப்படும் மாற்றுத் தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதா என்பதை, விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்யத் தயார். இதுதான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. ✻

## சமாதான முயற்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*இவை ஒருபுறமிருக்க, கடந்த ஐந்து மாதங்களாக எமது இயக்கம் பிரயோகித்து வரும் புதிய போருபாயம் காரணமாக, சிறிலங்காப் படையினருக்குப் பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்பது உலகறிந்த விடயம். அவ் இழப்புகள் காரணமாக இராணுவத்தினர் மத்தியில் பீதியும் விரக்தியும் ஏற்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கில் இராணுவத்தை விட்டோடுகின்றனர் எனவும் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.*

*ஆனாலும் இராணுவ இயந்திரத்தில் பாரிய நிர்வாக மாற்றங்களைச் செய்து, இராணுவத்தை மீளமைத்து, அவர்களைப் போருக்கு ஏவிவிடவே அரசு முயல்கின்றது. அத்தோடு இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்களையும் ஒருங்குதிரட்டி போரை எப்படித் தொடர்வது, போரில் இக்குழுக்களின் பங்கு என்ன என்பது பற்றியும், சிறிலங்காவின் படைத்துறைத் தலைமைகள் சதியாலோசனைகள் செய்கின்றன.*

*இவற்றையெல்லாம் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது, சமாதான முயற்சிகளுக்குக் கதவினை அடைத்து வைத்து விட்டு, தொடர்ந்தும் போரை நடாத்தவே சிறிலங்கா அரசு எண்ணங் கொண்டிருப்பது துலாம்பரமாகப் புலனாகின்றது.* ✻

## 60 நாட்களில் 213 படையினர் பலி. 175 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### 100 புலிவீரர்கள் வீரச்சாவு.

கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதியிலிருந்து ஏப்ரில் 15 ஆம் திகதி வரையுள்ள 60 நாட்களிலும் சிங்களப் படையினருடன் நடைபெற்ற சண்டைகளில், மொத்தம் 213 படையினர் பலியாகியுள்ளனர்; இவர்களிடமிருந்து 175 நவீன ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளோம்.

இந்த இரண்டுமாத காலப் பகுதிகளிலும் சிங்களப் படையினர் 6பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தமிழீழத்தில் நடாத்தியுள்ளனர்.


'கயே பகர' என்ற பெயரில் மணலாற்றிலும்,
'கறுப்பு நரி', 'வன்னி விக்கிரம— 3' என்ற பெயர்களில் வவுனியாவிலும்,
'பச்சைக் குடா' என்ற பெயரில் திருக்கோணமலையிலும்,
'தேசர்', 'அந்தேகர்' என்ற பெயர்களில் மட்டக்களப்பிலும் இவை நடாத்தப் பட்டன.

இதில் 'கயே பகர' நடவடிக்கை சிறீலங்காப் படைக்குப் பலத்த தோல்வியைக் கொடுத்துள்ளது. இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்ட சிலநாட்களில் இழப்புகள் காரணமாக இராணுவத் தலைமைப்பீடம் நடவடிக்கையைக் கைவிட்டு விட்டது. இச்சமரில் இராணுவத்திடமிருந்து பெரும்பயனுடைய பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றை, நாம் கைப்பற்றியிருந்தோம்.

மற்றைய இராணுவ நடவடிக்கைகளும் சிறீலங்கா அரசுக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

இந்த இரண்டுமாத காலப் பகுதிகளிலும் நடைபெற்ற தாக்குதல்கள், சமர்களில் பங்கேற்று, 100 புலிவீரர்கள் வீரச்சாவை அணைத்துக் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்
கடலிலே காவியம் படைப்போம
SEA TIGERS
OF LIBERATION TIGERS



கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட கடற்புலிகளின் படகு.

### தமிழீழக் கடல்

தமிழீழத்தைப் பொறுத்தளவில் இது மிக மிகப் பிரதானமானது. எங்கள் தாய்த் திருநாட்டில் நிலத்திற்கு நிகராக கடலும் இணைந்திருக்கிறது.

தமிழீழ நிலப் பகுதியை எங்கள் கடல் மூன்று பக்கங்களில் அரவணைத்தபடி உள்ளது.

பலர் நினைப்பதைப் போல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி மட்டும்தான் தமிழீழத் தாயகம் அல்ல.

பெருமையும், பழமையும், செழுமையும் கொண்ட இந்தக் கடலும் நிலமும் இணைந்தது தான் எமது தமிழீழத் தாயகம் ஆகும்.

### இது எங்கள் கடல்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எமது முன்னோர்களின் சமூக. பொருளாதார வாழ்வோடு இது பின்னிப் பிணைந்து நிற்கின்றது.

எமது முன்னோர்களின் கட்டு மரங்களும், வாணிபக் கப்பல்களும், போர்ப் படகுகளும், இக் கடலன்னையின் மடியில்தான் தவழ்ந்து திரிந்தன.

தமிழீழக் கடல் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாக நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் ஆகிய விடயங்களைத் தீர்மானிக்கும் எதிர்காலத்திலும் சரி, எமது கடல் மிகப் பிரதான பங்கு வகித்தது - வகிக்கப் போகின்றது.

இப்படியாகப் பல பரிமாணங்களில் முக்கியத்துவம் பெற்ற - பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள - எங்கள் கடலை நாம் சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில், தமிழீழக் கடற் பரப்பில் நாம் எதிரியைவிடப் பலம் பொருந்தியவர்களாக மிளிர வேண்டும். இந்த யதார்த்த உண்மையை அன்றே புரிந்து கொண்ட எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், பல வருடங்களுக்கு முன்னரேயே அதற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து, படிப்படியாக அதற்கு நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.

சிங்களப் பேரினவாத அரசிடம் இருந்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம் என்னும் போது, தமிழீழத் தாயகத்தின் தரை எல்லைகளையும் கடல் எல்லைகளையும் விடுவிப்பது என்பதையே, அது குறித்து நிற்கின்றது.

எனவே, தமிழீழத் தாயகத்தின் ஒரு பகுதியாகிய தரையில் பிரமாண்டமான வளர்ச்சியுடன் இருக்கும் எமது தரைப் படையைப் போன்று, தமிழீழம் தனக்கென்று ஒரு கடற்படையையும் கட்டி எழுப்ப வேண்டியது அவசியம்.



கடற்புலிகளின்
சிறப்புத் தளபதி சூசை

ஆனாலும் கடற்புலி அணியினர் எதிரியிடம் வலிந்து சென்று கடற் சண்டைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் அந்தந்தக் காலங்களோடு ஒட்டிய தேவைகளை நிறைவு செய்யும் பல பணிகளை, அவர்கள் ஆற்ற வேண்டியிருந்தது. கடற் பயணங்கள் போவதற்கும் அவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்குமான வேலைகளையே ஆரம்பத்தில் கடற்புலி அணியினர் செய்து வந்தனர்.

எனினும் சிறீலங்கா கடற் படையினரின் போர்ப் படகுகள் மீது, ஆங்காங்கே ஒரு சில கடற் கண்ணித் தாக்குதல்களையும் நிகழ்த்தியுள்ளனர்.

1984ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதிலிருந்து 6 வருடங்களாகப் பெரிய அளவிலான கடற் சண்டைகள் எதிலுமே ஈடுபடாதிருந்த கடற்புலி அணியினர், 1990ஆம் ஆண்டு திரும்பவும் சிறீலங்கா இராணுவத்துடன் போர் ஆரம்பமாகிய போது, கடற் சண்டைகளில் ஈடுபடத் தொடங்கினர்.

இக் கடற் போரிலும் கரும்புலித் தாக்குதல் வடிவம் புகுத்தப்பட்டு, கடற் போர் ஒரு புதிய பரிமாணத்திற்குள் சென்றது.

# விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

வும், வெளி உலக வர்த்தகத் தொடர்புகளுக்காகவும் முக்கியம் பெறுகின்றது.


ஆனால் அதைவிட முக்கியமாக, தமிழீழத்தின் பாதுகாப்புக்கு இக் கடல் மிகமிகப் பிரதானமானது.

இக்கடல் எமது கட்டுப்பாட்டில் உள்ளவரை மட்டும்தான் அதனால் வரும் பொருளாதார நன்மைகளையும், அரசியல் நன்மைகளையும் எமது மக்கள் அனுபவிக்க முடியும்.

ஆகவே எமது கடல் எமதுதேசத்தின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகமான திருகோணமலையைக் கொண்டிருப்பது, எமது கடலின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இது தவிர கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல துறைமுகங்களையும், பொருளாதார மையங்களையும் எமது கடல் கொண்டிருக்கின்றது.

தமிழீழத் தாயக மீட்பிற்கான ஆயுதப் போராட்டம் கருக்கொண்டு ஆரம்பமாகிய முன்னைய காலத்திலும்சரி, அது முனைப்புற்று வளர்த்துச் செல்லப்படும் நிகழ்காலத்திலும்சரி, விடுதலைக்குப் பின் நிறுவப்படப் போகின்ற தனி அரசு ஆட்சியில்



கடற்புலிகளின்
தளபதி கங்கை அமரன்

எமது மக்களின் சுதந்திர எழுச்சியை உற்று நோக்குவோமானால் அது புரட்சிகர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபின் எந்த அளவுக்குக் கடலோடு பின்னிப் பிணைந்து இருக்கின்றது, என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழீழம் தரைத் தொடரில் தனது எல்லையாக சிறீலங்காவை மட்டுமே கொண்டிருக்கின்றது. ஏனைய திசைகளில் கடலிலேயே எமது எல்லைகள் இருக்கின்றன. எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும், தமிழீழக் கடல் மிகப் பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது.

இச் சூழ்நிலையிலேயே 1984ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்றுரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு 'கடற்புலிகள்' எனப் பெயரும் சூட்டினார்.

ஆரம்பத்தில் கடற்புலி அணியினருக்கு கடல் சம்பந்தமான அறிவு ஊட்டப்பட்டதுடன், கடற் சண்டைகளுக்குத் தேவையான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

இந்த வகையில் சிறீலங்காக் கடற்படை மீதான தனது முதலாவது பாரிய தாக்குதலை, 10.07.1990 அன்று வல்வைக் கடலில் வைத்துக் கடற் கரும்புலிகள் மேற்கொண்டனர்.

வெடி மருந்து நிரப்பிய படகொன்றுடன் சென்ற கடற்புலிகளான மேஜர் காந்தருபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சிறீலங்கா கடற்படையின் ஒரு போர்க் கப்பலைச் சேதமாக்கி, இந்த வீர சாதனையைப் படைத்தார்கள்.

இதே போன்று 04.05.1991 அன்றும், வல்வைக் கடலில் வைத்துக் கட்டளைக்கப்பலொன்று கடற்புலிகளால் தகர்க்கப்பட்டது. இதுவும் ஒரு கரும்புலி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் வீரச்சாவை அணைத்துக் கொண்டார்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சுதந்திரமாக உலா வந்த சிங்களக் கடற்படையினருக்கு, இவ்விரண்டு கரும்புலி நடவடிக்கைகளும் பீதியைக் கொடுத்திருந்தன. அத்துடன் தமிழீழக் கடற்பரப்பில்

( 11 ஆம் பக்கம் பார்க்க )

# பாவற்குளம்

சுசி மாமா என்றால், வவுனியா மாவட்டத்தில் அறியாதவர்கள் எவருமே இல்லை. அந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்குமே அவன் மாமாதான். அவர்கள் அனைவருமே அவனை விரும்பினார்கள். அந்த மண்ணில் இளைய வாரிசுகள்தான், சுசியாக இருந்தவனை சுசி மாமாவாக மாற்றிவிட்டார்கள்.

பாவற்குளம்தான் சுசி மாமா பிறந்து வளர்ந்த கிராமம். தமிழீழத்தின் எல்லைகளைத் தன் இரு கைகளையும் நீட்டி வரையறுத்துக் கொண்டிருக்கும் பாவற்குளத்தையும், அதன் முன்பாக அதையே நம்பியிருக்கும் கிராமத்தையும், வயல் வெளிகளையும், அந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட அதிகமாக நேசித்தான்; சுசியும் அவர்களைப் போலத்தான். அந்த மண்ணுடன் தன்னை இறுகப் பிணைத்திருந்தான்.

பாவற்குளத்திற்கு அருகில் அதனை ஒட்டிக்கொண்டே இராசேந்திரங் குளம் எனும் கிராமம் உள்ளது. டேவிட் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன். சிறுவயதிலேயே டேவிட்டும் சுசியும் நண்பர்களாகி விட்டார்கள். பள்ளிக்கூட வகுப்பறை ஒன்றில் முதன் முதலாக ஒருவரையொருவர் கண்டுகொண்டார்கள். மிக விரைவிலேயே அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள். அந்த வயதிலேயே ஓர் புரிந்துணர்வு; உண்மையான அன்பை — பாசத்தைத் தங்கள் நெஞ்சங்களில் அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். ஒருவனை ஒரு நாளேனும் காணாவிடில் மற்றவன் சோர்ந்து விடுவான்; கலங்கி விடுவான்.

அவர்கள் வாழ்ந்த கிராமங்களின் எல்லையிடப்படாத வயல் வெளிகளும், வாய்க்கால்களில் பாய்ந்தோடும் குளத்துத் தண்ணீரும், காட்டின் கரைகளும் அந்த நண்பர்களின் அன்பை மேலும் வளர்த்தன; உரமூட்டி உறுதி சேர்த்தன. அவர்கள் இருவரும் ஒருவரில் ஒருவர் மிகவும் அன்பு வைத்திருந்தனர் அதைப் போலத்தான் அந்த மண்ணில், அந்த வயல் வெளிகளில், காட்டுத் தரைகளில், ஏன் எல்லாவற்றிலுமே அவர்கள் மிகவும் பற்று வைத்திருந்தனர்.

எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் நடந்தமாதிரியே பாவற்குளத்திலும் நடந்தது. முதலில் சில சிங்களவர்கள் வயற்கரையோரங்களில், காட்டுக் கரைகளில் குடி வந்தனர். பின்பு அகலக் கால்களை வைக்கத் தொடங்கினர். காடு ஒரு பக்கமாக அழிக்கப்படத் தொடங்கியது. மறு பக்கமாகத் தமிழர் கிராமங்கள் அபகரிக்கப்படத் தொடங்கின. குடியேற்றத்தின் மூலம் சிங்களச் சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

காலப்போக்கில் சிங்களக் காடையர்களின் அடாவடித் தனங்கள் அதிகரித்தன. தமிழர்களுடனான சில கலகங்கள் வந்தன. தமிழர்கள் கடுமையாக எதிர்த்த பொழுதெல்லாம் சிங்களக் காடையர்களுக்குத் துணையாக சிறீலங்காவின் காவற்துறையும் வந்தது. வலுவற்றவர்களின் எதிர்ப்பு கொடிய ஆயுதங்களுக்கு முன் என்ன செய்ய முடியும்?

பாவற்குளத்தைச் சுற்றி சிங்களக்குடியேற்றக் கிராமங்கள் புதிது புதிதாக எழுந்து கொண்டிருந்தன. சிங்கள அரசு இயந்திரம் கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டித், தமிழர் நிலங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கொண்டிருந்தது.



மேஜர் டேவிட்

(கார்த்திகேசு செல்வக்குமார்)

இராசேந்திரன்குளம்-வவுனியா

பிறப்பு : 30-05-1964

வீரச்சாவு: 19-09-1991

சிங்களவர்களின் ஆக்கிரமிப்பும், இராணுவ அடக்கு முறையும் அந்தப் பகுதி எங்கும் தலைவிரித்தாடின. சுசியும் டேவிட்டும் இப்போது இளைஞர்களாக இருந்தார்கள். அதற்குள்தான் அந்த எல்லையோரப் பகுதியில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. பாவற்குளத்தில் சிங்களப் பாடசாலை ஒன்று இருந்தது. சிங்கள அரசின் நிர்வாக அதிகாரிகள் இருந்தனர். பாவற்குளத்தின் நீர்ப்பங்கில் பெருமளவு, சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. எது எப்படியோ, அந்த எல்லையோரத் தமிழ்க் கிராமங்களில் அமைதி அழிக்கப்பட்டிருந்தது.

'எங்கள் மண் மீட்கப்பட வேண்டும்' — இந்த நினைவே அங்கு வாழ்ந்த அனைவரின் நெஞ்சிலும் பற்றிக் கொண்டது. சுசி மாமாதான் முதலில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டான். இரகசியமாக இயங்கிய அந்த நேரத்து இயக்க நடைமுறையின்படி, அவன் டேவிட்டுக்குச் சொல்லாமல் — அவனுக்குத் தெரியப்படுத்தாமலேயே — சென்றுவிட்டான்.

டேவிட் தனித்துப் போனான். அவனுக்கு எல்லாமே வெறுமையாக இருந்தது. அவர்கள் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள், கிராமத்து வீதிகள், வாய்க்கால் தண்ணீர் எல்லாமே அவனுக்கு வெறுமையாகத் தெரிந்தன. ஆனால் அதுவே அவனில் ஒரு புதிய சிந்தனையோட்டத்தை வளர்த்தது.

'எங்கட கிராமம் மீட்கப்பட வேண்டும்.'

அது ஒரு தனி மனிதனின் உணர்வுதான். ஆனால் அது ஒட்டுமொத்த சமூகத்தின் நலனாக இருந்தது: தாயகத்தின் நலனாகவும் இருந்தது. சில நாட்களின் பின்பு டேவிட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டான்

அந்த நேரங்களில்தான்......

பாவற்குளம். இராசேந்திரங்குளம் உட்பட அதன் அயற் கிராமங்கள் அனைத்திலிருந்தும், தமிழர்கள் ஆயுத முனையில் அடித்து விரட்டப்பட்டனர். எதை எடுப்பது?; எதை விட்டுச் செல்வது? தங்கள் இதயங்களை, நினைவுகளை விட்டுவிட்டு வெறும் மனிதக் கூடுகள் இடம் பெயர்ந்தன.

சுசி மாமாவின் தந்தை நாட்டுப் பற்று நிறைந்த மனிதர்; அந்த மனிதரும், அவரைப் போல இன்னும் சிலரும் தங்கள் வாழ்விடத்தை விட்டு விலக விருப்பமின்றி அந்த மண்ணிலேயே தொடர்ந்து நின்றார்கள். ஆனால், ஓர் இரவில் சுற்றி வளைத்த சிங்களத் துப்பாக்கிகள் அந்த மனிதர்களை இரக்கமற்றுக் கொன்றன. சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்புக்குத் தடையாக நின்ற அந்த மனிதர்கள், அரச படைகளால் அழிக்கப்பட்டனர்.

காலங்கள் சென்றன. வவுனியா மாவட்டத்தில் வெடியோசை எங்கு கேட்டாலும் அங்கு மாமா நிற்பான்; அருகிலேயே டேவிட்டும் நிற்பான். எல்லாச் சண்டைக் களங்களிலுமே இருவரின் துப்பாக்கிகளும் இலக்குத் தவறாமல் எதிரிகளை விழுத்தின. அவர்கள் சில நேரங்களில் ஆட்கள் அற்றுப் போன தங்கள் கிராமங்களிலும் அலைந்தனர். ஆனால் இப்போது, அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன; துணைக்குத் தோழர்கள் இருந்தனர்.

சுசி மாமா அனைத்துத் தோழர்களின் மனதிலும் மிக விரைவிலேயே இடம் பிடித்துக் கொண்டான். சுசி மாமா நிக்கிறான்' — அந்த நினைவே அவன் தோழர்களுக்கு ஓர் ஆன்ம பலத்தைக் கொடுத்தது. சண்டைக் களங்களில் அசையாத உறுதியுடன் நின்று கொண்டு, மிக இலகுவான செயல் ஒன்றைச் செய்பவன் போன்று வழி நடத்தும் அவனைப் பார்க்க, வியப்பாக இருக்கும். ஒரு முறை, சண்டைக்கு அவர்கள் தயாராகி விட்டார்கள்; இன்னும் சில மணி நேரங்களில் குருமன் காட்டில் இராணுவக் காவலரண் ஒன்று இல்லாமற் போகும் — இந்த மண்ணின் விடிவிற்குப் போராடத் தேவையான ஆயுதங்கள் எங்கள் கைகளில் தவழும். ஆனால் அந்த நேரத்தில், 'சுசி மாமாவின் அம்மா இறந்துவிட்டாள்' என்ற செய்தி கிடைக்கிறது.

ஒருபுறம் தன்னை இந்த மண்ணிற்குத் தந்து அன்பையும், பாசத்தையும் கொட்டி வளர்த்த அம்மா அவனுக்காக எரியாமற் காத்துக் கிடந்தாள்.



மேஜர் சுசி (மாமா)

( ப. சிதம்பரநாதன் )

பாவற்குளம் 1 ம் யூனிற்-வவுனியா

பிறப்பு : 18 - 04 - 1964

வீரச்சாவு: 28 - 08 - 1991

மாமா தன் தாயின் உடலைப் பார்க்கப் போனான். ஒரு ப[illegible] வீரன் தாயைவிட தாய் நிலத்தை அதிகமாக நேசிக்கிறான் என்பதற்கு, மாமா ஒரு விளக்கமாக நின்றான்.

...... அன்று.

சுசி மாமாவும் டேவிட்டும் வேறு வேறு இடங்களில் நின்றனர் காலை நேரம்.

"இண்டைக்கு எங்கட ஊருக்குப் போறன்" என்று, டேவிட்டுக்கு மாமா 'வோக்கி டோக்கி' யில் அறிவித்தான். அவர்கள் நெடுகவும் போய்வந்து, எதிரிகளைச் சந்தித்துச் சண்டையிட்ட இடங்கள்தான். ஆனால் டேவிட் அதைப்பற்றிப் பெரிதாக எண்ணவில்லை.

"சரி போயிட்டு வா. வந்து விசயங்களைச் சொல்லு" என்றான்.

மாமாவும் அவனது தோழர்களும் பாவற்குளம் கிராமத்திற்குள் கால் வைத்தார்கள். அந்த மண்ணில் மிதித்ததுமே அவன் புது வேகம் வந்தது போல, உற்சாகமாய் இருந்தான். சிறு வயது தொடக்கம் அவன் பழகிய மரங்களும், மேடுகளும், பள்ளங்களும் அவனுக்கு இப்போது வழி சொல்லின. அவர்கள் நடந்தார்கள். தமிழர்களின் குடியிருப்புகள் அழிந்துபோய், புதர் மண்டிப் போய்க் கிடந்தன. தூரத்தில் — தமிழர் நிலங்களில் நின்ற சிங்களவர்களின் கல் வீடுகளும், பாடசாலைகளும் தெளிவாகத் தெரிந்தன.

ஒரு மண் மேட்டின் மேல் மாமா நின்றான். முன்னால் மாமரம் ஒன்று சிதைந்து போன நிலையிலும், இன்னமும் உயிர்ப்புடன் நின்றது.

"இதுதான் என்ர வீடு இந்த வீட்டுக்குள்தான் நான் சின்னவனாகத் தவழ்ந்ததும், பெரியவனாக வளர்ந்ததும்."

சுசி மாமாவின் வார்த்தைகள் அவனது கிராமத்தின் காற்றில் கலக்கும் முன்னமே, பற்றைகள் எங்கும் பதுங்கியிருந்த இராணுவ வெறியர்களின் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கின.

அவர்கள் நிலை எடுப்பதற்கு முன்பே மாமாவிற்குச் சூடு விழுந்தது. அவன் பிறந்து வளர்ந்த வீட்டின் மடியிலேயே, அவனது தந்தை மாதிரியே அவனும் உயிரற்று விழுந்தான். அடுத்தது குமாருக்கு ...... எஞ்சி நின்ற தோழர்களின் துப்பாக்கிகள் எதிரிகளை நோக்கி இயங்கின. அவர்கள் ஐந்து பேர்தான் நின்றார்கள். எதிரிகளோ பலர் இருந்தனர். ஆனாலும் மாமாவையும் குமாரையும் தூக்கிக்கொண்டே மற்றைய தோழர்கள் பின்வாங்கி வந்தார்கள்.

சண்டைக்குச் சென்ற தோழர்கள் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் தோள்களில் இருவர்...... முகாமில் இருந்த அனைத்துத் தோழர்களும் எழுந்து ஓடினார்கள். நெஞ்சத்தில் இனந்தெரியாத தவிப்பு ...... யார் ......? டேவிட்டும் ஓடினான்.

மறுபுறம், இந்த மண்ணின் வாழ்விற்குத் தேவையான ஆயுதங்கள் ......

டேவிட்டுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. அசைவற்றுப்போய் ஒரு மரத்துடன் இருந்துவிட்டான். சுசி மாமாவோ ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அன்று குருமன் காட்டில் இராணுவக் காவலரண் ஒன்று சிதறியது. ஆயுதங்கள் புலிகளின் கைகளில் ...... அதன் பின்பே,

(11 ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம்

தமிழீழப் பெண்களின் சமூக மேம்பாட்டுக்காக, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் பல வேலைத் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அவற்றுள் ஒன்றுதான் பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு நிறுவனமாகும்.

போரால் பாதிக்கப்பட்ட பெண்கள், மற்றும் விதவைகள், ஆதரவற்ற பெண்கள் ஆகியோரின் வாழ்க்கை நிலையை மேம் படுத்தவும், அவர்களுக்கு புதிய நம்பிக்கையையும், புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தவும, இப் புனர்வாழ்வு நிறுவனம் பாடுபடுகிறது.

கடந்த மாதம் சர்வதேச பெண்கள் நாளில், கிளிநொச்சியில் மகளிர் முன்னணியினரால் நடாத்தப்பட்ட தமிழீழப் பெண்கள் மாநாட்டில், தமிழீழப் பெண்களான சமூக மேம்பாட்டிற்கான வேலைத் திட்டங்களும் அரசியற் தீர்மானங்களும், நிறைவேற்றப் பட்டிருந்தன.

அவ் வேலைத் திட்டங்களில் இன ஒடுக்குமுறையாலும், போர்ச் சூழலாலும் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவைகள், ஆதரவற்றோர் ஆகியோரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும வகையில் பொருளாதாரத் திட்டங்களை அமைத்துச் செயற்படுத்துவதும் ஒன்றாகும்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் இவ் வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக, செல்வி மாலினி அவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தின் நோக்கங்களையும், வேலைத் திட்டங்களையும் சுருக்கமாகத் தருகின்றோம்.

எமது தமிழ்த் தேசியத்தை அழித்தொழிக்க முனையும் பாரிய அரச அடக்குமுறைக்கு எதிராக மட்டுமல்ல, ஒன்றுக்கொன்று சிக்கலான இறுக்கமான பிணைப்பைக் கொண்ட சமூக ஆதிக்கத்திற்கு எதிராகவும், ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் உறுதியான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாக, எமது தமிழீழப் பெண்கள் உள்ளனர்.

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனமானது, இப பல்முனை அடக்குமுறைகளாலும் பாதிப்புக்குள்ளாகி சமூக பொருளாதார வாழ்வில் மிகப் பின் தங்கிய நிலையிலுள்ள பெண்களை இனங்கண்டு, அவர்கள் மத்தியிலேயே முதலில் தனது வேலையைச் செய்ய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையிலுள்ள - பெண்கள் கூடுதலாக அரச இராணுவ அடக்கு முறையால் கணவனை இழந்தவர்களாகவும், கணவன்மார் ஊனப்படுத்தப்பட்டவர்களாகவும், சாதியம் சீதனம் போன்ற சமூக அநீதிகளாலும், ஆணாதிக்கத்தினாலும் ஏற்படுகின்ற குடும்பப் பிளவு காரணமாகக் கணவனைப் பிரிந்து வாழ்பவர்களாகவும், இருக்கின்றனர்.

பொருளாதாரத்திலும் சரி வேறு துறைகளிலும் சரி, தமது கணவன்மாரில் தங்கியிருந்த இப்பெண்கள் அவர்களை இழந்தபோது, தமது குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதிலும், உடை கொடுப்பதிலும், மருத்துவக் கவனிப்பு, பாடசாலைக்கு அனுப்புவது என்பவற்றிலும் மிகச் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலைச் சீருடைகளை வாங்குவதற்கும், கொப்பிகளை வாங்குவதற்கும் பணமின்மையால் தமது குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாது இடையில் நிறுத்தி உள்ளார்கள். இந்நிலை, மிக மோசமான சமூகப் பின்னடைவாக உள்ளது.

அறியாமை இருளில் இருக்கும் வரைதான் அடக்குமுறையாளன் எம்மீது ஆட்சி செலுத்த முடியும். மக்கள் அறிவு வெளிச்சத்திற்கு வந்துவிட்டால் தங்களுடைய தொண்டைக் குழிகளுக்கருகேயே அரச அரக்கனின் கோரப் பற்கள் இருப்பதைக், கண்டு கொள்வார்கள; பெண்களுடைய நிலையும் இவ்வாறே. பெண்கள் அறியாமையில் இருக்கும்வரை பெண் விடுதலை சாத்தியமில்லை. இவ்வாறு அடக்குமுறையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கு அறியாமையிலிருந்து விடுபடுவது என்பது முன் தேவையாக இருக்கும் பொழுது, எமது சிறார்களோ அடிப்படைக் கல்வி அறிவே பெற முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.



மாலினி
பெண்கள் புனர்வாழ்வு நிறுவனப் பொறுப்பாளர்

இவ்வாறு பாதிப்புக்குள்ளாகித், தமது அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ள கணவன்மாரை இழந்த பெண்களும் அவர்களது பிள்ளைகளும், உளவியல் அடிப்படையிலும் தாக்கத்திற்குள்ளாகி உள்ளனர்.

இந்நிலையில் இப்பெண்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை என்பது, பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தப் பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

இதில் பிரதான திட்டமாக, பெண்களுக்கான சிறு கைத்தொழில் நிலையங்களை உருவாக்கும் திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தின்மூலமாகப் பெண்கள சுயமாக பொருளாதாரத்தை ஈட்டி, சமூக அடக்குமுறைகள் பலவற்றை உடைத்துக் கொண்டு நம்பிக்கையோடு நிமிர்கின்ற நிலை, உருவாகி உள்ளது. இம்மாதிரியான ஒவ்வொரு நிலையங்களிலும் 20 பெண்கள் கொண்ட 5 நிலையங்களைக் கடந்த ஒரு வருட காலத்தில் உருவாக்கியுள்ளோம்.



புனர்வாழ்வு நிறுவனத்தின் கைத்தொழில் நிலையமொன்றில், வேலையிலீடுபட்டுள்ள பெண்கள்.

(. நெல்லியடி, நாவாந்துறை [2], மணியந்தோட்டம், குருநகர்) கிட்டத்தட்ட 100 பெண்கள் இப் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர். இனி வரும் நாட்களில் புதிய நிலையங்களை நிறுவியும், நிறுவப்பட்ட நிலையங்களை அபிவிருத்தி செய்தும் இத்திட்டத்தை விஸ்தரிக்க உள்ளோம்.

உற்பத்தித் திறன் அதிகரிக்க ஊதியமும் அதிகரித்துச் செல்லக் கூடிய வகையிலேயே ஊதியம் வழங்கப்படுகிறது. சாதாரணமாக நாளொன்றுக்கு சராசரி 40 50 ரூபா ஊதியத்தை, இப்பெண்கள் பெறக்கூடியதாக உள்ளது. இவர்கள் தமது உற்பத்திப் பொருட்களுக்கு உதயதாரகை என்று பெயரிட்டுள்ளனர். ஆடைகள், தும்புப் பொருட்கள், உணவுப் பொருட்கள் என்பன தயாரிக்கப்படுகின்றன. இந்தத் தயாரிப்புக்கள் தரமானவையாக இருந்தபொழுதும், இறக்குமதி செய்யப்படும் மிகக் கவர்ச்சியான தயாரிப்புக்களோடு சந்தை வாய்ப்புக்காகப் போட்டி போடவேண்டி உளளது. எமது மக்கள் தேசிய உணர்வோடு வெளிநாட்டுப் பொருட்களை நிராகரித்து, சுதேச உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான், இப்பெண்கள் தளராது முன்னேற முடியும்.

பொருளாதாரரீதியாக முன்னேறினால் மட்டும் பெண்கள் ஒரு புது வாழ்வைப் பெற்றுவிட முடியாது. இந்த உலகம் பற்றியும், சமூக பொருளாதார அரசியல் விடயங்கள் பற்றியும், விஞ்ஞான பூர்வமான அறிவையும் அணுகுமுறையையும் பெறுவது அவசியமாகிறது. இந்நோக்கில் வாராவாரம் இவர்கள் மத்தியில் கலந்துரையாடல் மூலமாகக் கற்பித்தல் வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள்மீதான அடக்குமுறையை உடைப்பதற்குப் பல கோணங்களில் ஆப்பு வைக்க வேண்டியுள்ளது. பெண்களுக்கு எதிரான பழைய பிற்போக்கான மதச் சித்தாந்தங்கள், மரபுகள், மூட நம்பிக்கைகளைத் தகர்த்துப் புதிய புரட்சிகரக் கருத்துக்களைச் சமூகத்தின் மத்தியில் விதைப்பதற்கு, கலை இலக்கிய வடிவங்கள் சிறந்த கருவிகளாக உள்ளன. இந்த வகையில் புரட்சிகரப் பெண்கள் சக்தியை உருவாக்கக்கூடிய பெண்களின் ஆளுமை, கலை இலக்கிய ஆற்றல், என்பவற்றை வளர்த்தெடுக்கின்ற ஆய்வுப் பட்டறையாகவும் தளமாகவும், ஒவ்வொரு கைத்தொழில் நிலையத்திலும் மாதக்கடைசியில் கூட்டப்படுகின்ற பெண்கள் மன்றம் அமைகின்றது.

பெண்கள் கூட்டாக இணைகின்ற பொழுதுதான் இவ்வாறு பலவற்றைச் செய்வது சாத்தியப்படுகிறது. இவ்வேளையில் இக்கைத்தொழில் நிலையங்களுக்கு வேலைக்கு வருகின்ற பெண்களுக்கு, தமது குழந்தைகளுக்கு நேரத்திற்கு உணவு சமைத்துக் கொடுப்பதிலும், தமது குழந்தைகளைப் பராமரிப்பதிலும் மிகவும் சிரமம் இருந்து வருகிறது. எனவே, காலப்போக்கில் இவர்களுக்காக உணவகங்களையும், குழந்தை பராமரிப்பு நிலையங்களையும் நிறுவவேண்டிய பொதுவான தேவையும் உள்ளது.

இவ்வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த ஒரு வருட காலமாக இப்பெண்கள் மத்தியில் நாம் உறவாடி வருகிறோம். அந்த ஒரு வருடத்தின் முன்பு அவர்கள் இருந்த நிலைக்கும், இப்பொழுது அவர்கள் இருக்கின்ற நிலைக்கும் இடையே நிறைய இடைவெளி இருக்கின்றது; அவர்கள் மாறி வருகின்றார்கள்.

அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்தம் தேவை என்ற அறிவித்தல் கிடைத்திருந்த போது, இப்பெண்கள் முழுப்பேரும் ஒரு சிறு தயக்கமும் இன்றி இரத்தம் தருவதற்குப் போட்டிபோட்டுக்கொண்டு முன் வந்தார்கள். இந்நிலையை, இன்றைய எமது சமூகத்திலுள்ள சாதாரண பெண்களின் மன நிலையோடு ஒப்பிடுகின்றபொழுது, இது பிரளயத்தைப் போன்றது.

உணவு, உடை, உறையுள், பாடசாலைக் கொப்பி போன்றவற்றை வழங்கிச் சில குடும்பங்களுக்கு உடனடி நிவாரணங்களையும் அளித்திருக்கின்றோம். ஆயினும், நீண்ட கால அடிப்படையில் அமைந்த புனர்வாழ்வு வேலைத் திட்டமே, பெண்களை அவர்களது விடுதலைக்குரிய பாதையில் இணைக்கக்கூடியதாக அமையும்.


✼

# பெண் விடுதலையும் - புலிகளும்

பெண் விடுதலை என்றால் என்ன? பெண் விடுதலை சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? பெண் விடுதலை என்ற குறிக்கோளை அடைவதற்கு விடுதலைப் புலிகள் நெறித்துள்ள கொள்கைத் திட்டங்கள் என்ன? இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான விடை அளிக்கும் வகையில், இந்தக் கொள்கை விளக்கக் கட்டுரை அமைகிறது.

எமது இயக்கத் தலைவர் 'பிரபாகரன்' அண்மையில், அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். இந்த அறிக்கையில் பெண் விடுதலை சம்பந்தமாக புலிகள் இயக்கத்தின் தத்துவார்த்த நோக்கினை, குறிக்கோள்களை, போராட்ட அணுகுமுறையை இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளார். இந்தக் கருத்துக்களை அடிப்படைக் கருவாகக் கொண்டு இந்தக் கட்டுரை மேலும் விளக்கங்களைத் தர முயற்சிக்கின்றது.

"இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால், பெண்ணினம் முதலில் தனக்கெதிராக ஏவப்பட்டுவரும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தனது சிறழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதானால், பெண்ணினம் தனது இழிநிலை பற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்ம வினையென்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழமை என்றும், பண்பாட்டுக் கோலமென்றும் காலங்காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக்கிடந்த பெண்ணினம், விழித்தெழ வேண்டும்."



''பெண் ஒடுக்குமுறை என்பது யுகம் யுகமாக எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாடுகளிலும் நிலவி வந்த ஒரு சமூக அநீதி. இந்த சமூக அநீதி முறை இன்னும் இந்தப் பூமியிலிருந்து அகன்றுவிடவில்லை'', என்கிறார் தலைவர் பிரபாகரன்.

பெண் ஒடுக்குமுறை என்பது உலகளாவிய ஒரு சமூகப் பிரச்சினை. இந்த சமூக அநீதி இன்னும் மனித உலகத்திலிருந்து ஒழிக்கப்படவில்லை என்பதை, பிரபாகரன் சுட்டிக்காட்டுகிறார்.

பெண் ஒடுக்குமுறை மனித சமூகங்கள் தோன்றிய இருண்ட யுகங்களிலிருந்து தோற்றம் கொண்டு நீண்ட நெடுங்காலமாக நீடித்து வந்தபோதும், இன்றும் இந்த நவ யுகத்திலும் இப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இந்த ஒடுக்குமுறையானது இன்றும், காலத்திற்கு ஏற்ற கோலங்களில், புதிய தோற்றப்பாடுகளாக, மிகவும் நுட்பமான வடிவங்களில், முன்னடைந்த நாடுகளிலும்சரி பின்னடைந்த நாடுகளிலும்சரி, மேற்கிலும் சரி கிழக்கிலும் சரி, முதலாளித்துவ உலகிலும் சரி மூன்றாம் உலகிலும் சரி, எங்கும் எல்லா சமூகக் கட்டமைப்புக்களிலும் தொடர்ந்து ஒரு சமூக நோயாக இருந்து வருகிறது. மனித இனத்தின் சரிபாதி சனத்தொகையான பெண்ணினம் தொடர்ந்தும் ஒடுக்குமுறை விலங்குகளால் பிணைக்கப்பட்டிருக்கிறதென்ற எதார்த்த உண்மை நிலையை, யாராலும் மறுக்க முடியாது.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக குறிப்பாக மேற்குலகிலும், சோசலிச உலகிலும் பெண் விடுதலை அமைப்புகள் தோற்றம் கொண்டு பெண் உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்தன. பெண்ணினம் விழிப்புற்று தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பயணத்தை ஆரம்பித்தது: இதில் குறிப்பிடத்தக்க சாதனைகளையும் ஈட்டியது.

''நீண்ட காலமாக வளர்ச்சிகண்ட நாடுகளில், தொடர்ச்சியாக நடந்து வந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக, பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக் கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும், தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும், இந்நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. இங்கு பழைய பிரச்சினைகள் புதிய வடிவங்களில் தோற்றங்கண்டு வருகின்றன'' என்கிறார் பிரபாகரன்.

முதலாளிய உலகில் பெண்ணினம் ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டப்படுகிறது. தொழிலில் சமத்துவமின்மை நிலவுகிறது. ஆணாதிக்க வன்முறை தாண்டவமாடுகிறது. மிகவும் ஆபாசமான விளம்பரப் படிமங்களாகப், பெண்கள் சித்திரிக்கப்படுகிறார்கள். குடும்பச் சீரழிவு, விவாகரத்துப் போன்ற பிரச்சினைகள் மேலோங்கி வருகின்றன. இப்படியாக மேற்குலகிலும் பெண் பிரச்சினை புதிய வடிவங்கள் எடுத்து வருகிறது.

பெண் ஒடுக்குமுறைக்கு மூலகாரணம் முதலாளித்துவ உற்பத்தி முறை என சோசலிச வாதிகள் வாதாடினர். தனியார் சொத்துடைமையின் தோற்றமும் வளர்ச்சியும் ஆணாதிக்க அதிகார உறவுகளை உருப்பெறச் செய்து பெண் அடிமைத்தனத்திற்கு வழிகோலியதாக, வரலாற்று ஆய்வுகளை வைத்து வாதாடினார் எங்கெல்ஸ். தனியார் சொத்துடைமை ஒழிக்கப்பட்டு சமத்துவமான பொருள் உற்பத்தி அமைப்பு கட்டியெழுப்பப்பட்டால் பெண் ஒடுக்குமுறை அகன்றுவிடும் என்றார், லெனின். பெண்ணின் விடிவிற்கு சோசலிச சமுதாய மாற்றமே ஒரே வழி என்ற கருத்து வலுப்பெற்றது. அன்றைய சோசலிச பெண்நிலை வாதிகளும் இந்தத் தத்துவக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டனர் விரக்தி அடைந்து விடுதலை வேண்டி நின்ற பெண்ணினம், சோசலிசப் புரட்சிப் போராட்டங்களில் அணிசேர்ந்து கொண்டது. பெண்ணினத்தின் முழுமையான பங்களிப்போடு பல நாடுகளில் சோசலிசப் புரட்சிகள் நிகழ்ந்தன. தனியார் சொத்துடைமை ஒழிக்கப்பட்டது. முதலாளியப் பொருள் உற்பத்தி முறை மாற்றியமைக்கப்பட்டது; சோசலிச பொருளாதாரம் நிர்மாணிக்கப்பட்டது. என்றுமில்லாதவாறு பெண்ணினம் பொருள் உற்பத்தித் துறையில் ஈர்க்கப்பட்டது.

சோசலிச நாடுகளில் பெண்ணின் பொருளாதார வாழ்க்கை நிலை உயர்ந்து, சமூக அந்தஸ்தும் மேம்பட்டது என்பது உண்மை. வீட்டுக்குள் முடங்கிப்போயிருந்த பெண்ணினம் கல்வி வாய்ப்புப் பெற்று, தொழில் வாய்ப்புப் பெற்று, பொருளாதார தங்கு நிலையிலிருந்து விடுதலை பெற்று, தனித்துவமாக தனது வாழ்க்கையைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் அளவிற்குச் சுதந்திரமான வாழ்வு நிலையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

''ஆயினும் இந்நாடுகளில் பெண் ஒடுக்குமுறை முற்றாக நீங்கியபாடில்லை. சமதர்ம சமூக உலகத்திலும் பெண்ணிற்குச் சமநீதி கிடைத்ததாகக் கூறிவிட முடியாது'' என்ற உண்மை நிலையைச் சுட்டிக் காட்டுகிறார், பிரபாகரன்.

சோசலிச உலகில் பெண்ணின ஒடுக்குமுறை புதிய பரிமாணங்களில் தோற்றப்பாடு கண்டது. தேச நிர்மாணம் என்ற இலட்சியத்துடன் சுயாதீனப் பொருளாதார வாழ்வைப் பெற பொருள் உற்பத்திக் களத்தில் குதித்த பெண்களுக்கு, குடும்பச் சுமை அதிகரித்தது. வீட்டுத் தொழிலும் வெளித் தொழிலுமாக பெண்கள் இரட்டை வேலைப் பளுவைச் சுமக்க வேண்டியிருந்தது. குடும்பப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ள 'கம்யூனிஸ கணவர்கள்' மறுத்தனர். தாய்மை என்ற கோட்பாட்டை வலியுறுத்தி சோசலிச அரசுகள் இன உற்பத்தியை ஊக்குவித்தனர். பொருள் உற்பத்தியும், இன உற்பத்தியும், வீட்டுப் பொறுப்புகளுமாக சோசலிசப் பெண்ணின்மீது சுமை ஏறியது.

பொதுவுடைமைச் சமதர்மம் ஆணாதிக்கத்தையும் அதனால் எழும் அதிகார அடக்குமுறை உறவுகளையும் அசட்டை செய்தது இதனால், வீட்டு நிர்வாகத்திலும் நாட்டு நிர்வாகத்திலும் ஆணின் சர்வாதிகாரத்தைப் பெண்ணினம் எதிர்கொண்டது. இதனா சமதர்ம உலகிலும் பெண்ணிற்குச் சமநீதி கிட்டவில்லை.

''இந்த சமூகப் பரிசோதனை அனுபவங்களிலிருந்து நாம் ஒரு உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது பொருளுலகத்தை எந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மனோவுலகில், பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில், ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.''

''பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில், அவர்களது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை, யாரும் மறுக்க முடியாது. ஆயினும் அதே வேளை ஆண் - பெண் உறவிலும், அந்த மானசீக உலகிலும் மாற்றங்கள் தேவை. உண்மையான சமத்துவம் என்பது ஆண் - பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில்தான் சாத்தியமாகிறது'', என்கிறார் பிரபாகரன்.

சமத்துவம் என்ற இலட்சியத்தை அடைய அடிப்படையான மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும் பெண்ணினம் வென்றெடுப்பது அவசியம். அத்துடன் கல்வியும், வேலை வாய்ப்பும் அவர்களது சமூக அந்தஸ்தையும் பொருளாதார வாழ்வையும் உயர்வடையச் செய்யும் என்பது உண்மை. பெண் விடுதலைக்கு இவை அடிப்படையானவை. ஆயினும், சமத்துவத்திற்கு இவை மட்டும் போதாது. ஆணின் மேலாதிக்கம் அகல வேண்டும்; ஆண் - பெண் உறவில் உள்ள முரண்பாடுகள் நீங்க வேண்டும். இதற்கு ஆழமான புரிந்துணர்வு வேண்டும். சோசலிச சமுதாயப் பரிசோதனைகள் இந்த எதார்த்த உண்மையை உணர்த்தத் தவறவில்லை என்பதே, பிரபாகரனின் வாதம்.

மூன்றாம் உலகில் பெண்களின் நிலைமை மிகவும் மோசமானது. இங்கு பெண்கள் மிகவும்

அநாகரிகமான முறையில் அடக்கப்படுகிறார்கள். வறுமையும், அறியாமையும், புராதனக் கருத்துலகின் மூட நம்பிக்கைகளும் பெண்ணினத்தை விலங்கிட்டு வைத்திருக்கின்றன. இங்குதான், பெண்விடுதலை மிகவும் முனைப்புடன் முன்னெடுக்கப்படவேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. தமிழீழமும் இந்த மூன்றாம் உலகின் ஒரு அங்கமாக இருக்கிறது.

தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான வரலாற்றுப் புறநிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர். இங்கு பெண்ணினம் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறை வடிவங்கள், பிரத்தியேகமானவை; தனக்கே உரித்தான எதார்த்த புற நிலைகளால் உருவாக்கப்பட்டவை.

''எமது சமூகக் கட்டமைப்பில் பெண்ணினம் மிகவும் மோசமான ஒடுக்குமுறை வடிவங்களை எதிர்கொண்டு நிற்கிறது. மிகவும் பின்தங்கிய சமூக பொருளாதார வாழ்வு ஒருபுறமும், அரச அடக்குமுறை அழுத்தங்கள் மறுபுறமும், ஆணாதிக்கக் கொடுமைகள் இன்னொரு புறமுமாக, பல பரிமாணங்களில் எமது பெண்கள் ஒடுக்குமுறையைச் சந்திக்கிறார்கள்.''

''நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி வளர்ந்த மூட நம்பிக்கைகளும், இந்த மூட நம்பிக்கைகளிலிருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும் சம்பிரதாயங்களும், எமது பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்து வருகின்றன. ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம், சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண்ணினம் வர்ணிக்க முடியாத் துன்பங்களை அனுபவித்து வருகிறது.'' இவ்வாறு தமிழீழப் பெண்ணினத்தின் பிரச்சினைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார் பிரபாகரன்.

எமது தனித்துவமான சமூகச் சூழலிலிருந்தும், எம்மை வியாபித்து நிற்கும் வரலாற்றுப் புறநிலை நிர்ப்பந்தங்களிலிருந்தும் எமது பெண்ணினம் எதிர் நோக்கும் ஒடுக்குமுறையின் தன்மைகள், இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன. இதில் பிரதான முரண்பாட்டு வடிவமாகப் பிரத்தியேகத் தன்மையைப் பெற்றிருப்பது, பேரினவாத அரச அடக்குமுறையாகும். அரச ஒடுக்கு முறையின் பேரழுத்தங்கள் தேசிய ரீதியில் முழு இனத்தையுமே பாதித்த போதும், பெண்ணினமே மிக மோசமான கொடுமைகளுக்கு ஆளாகிறது விதவைகளாக, அகதிகளாக, அனாதைகளாக அல்லற் படுவதும், எதிரியின் பாலியல் வன்முறைக்கு ஆளாகி மானபங்கப்படுவதும், குடும்ப வாழ்வு சீரழிந்து அவலப்படுவதும் பெண்ணினமே. இந்த இனவாத அடக்குமுறையானது பெண் சமூகத்தின் அடிப்படையான வாழ்வுரிமைக்கே பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது.

எனவே, ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகியுள்ள எமது தேசத்தின் சுதந்திரத்திற்காகப் போராடுவது, தமிழீழப் பெண்ணினத்தின் முதன்மையான தேசியப் பணியாக அமைகிறது. எமது தாயகப் பூமி மீட்டெடுக்கப்படாமல் பெண்ணினம் சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வதென்பது சாத்தியமில்லை.

''எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது, இன்றைய வரலாற்றுத் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி, எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது'', என்கிறார் பிரபாகரன்.

எமது தேசம் எதிர்கொண்டு நிற்கும் யதார்த்த புறநிலை உண்மைகள், வரலாற்று நிர்ப்பந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் எமது சமுதாயத்தில் பெண்ணினம் முகம் கொடுக்கும் ஒடுக்கு முறை வடிவங்களையும் கருத்திற் கொண்டே, பெண் விடுதலைக்கான தனது போராட்டத் திட்டத்தைப் புலிகள் இயக்கம் நெறிப்படுத்தி உள்ளது. பெண் விடுதலை நோக்கிய இப்போராட்டத் திட்டம், எமது விடுதலை இயக்கத்தின் பிரதான அரசியற் குறிக்கோள்களில் ஒன்றாக முன்னெடுக்கப்படுகிறது. அரசியல் சமூக பொருளாதாரப் பரிமாணங்களைக் கொண்டதாக மிகச் சிக்கலான பிரச்சினையாக வடிவங் கொண்டுள்ள பெண் ஒடுக்குமுறை பல முனைகளில், ஒரே காலகட்டத்தில் தொடுக்கப்பட வேண்டிய போராட்டமாக அமைந்து விட்டது. இதன் அடிப்படையில், பெண் விடுதலை என்ற புலிகளின் இலட்சியக் குறிக்கோளுக்கு ஒருவரை விலக்கணம் கொடுக்கிறார் பிரபாகரன்

''பெண் விடுதலை எனும்பொழுது அரச அடக்கு முறையில் இருந்தும், சமூக ஒடுக்கு முறைகளிலிருந்தும், பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே, எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.''

தேசியரீதியில், சமூகரீதியில், பொருளாதார ரீதியிலாக மும்முனைகளில் பெண் விடுதலைப் போர் முனைப்புறுவதாயின், பெண்ணினம் முதலில் மனோரீதியாக சமூகத்தின் கருத்துலக மாயையிலிருந்து விழிப்படைய வேண்டும் என்பதையும், பிரபாகரன் வலியுறுத்தத் தவறவில்லை.

பெண்ணடிமைவாத மூட நம்பிக்கைகளின் பிறப்பிடம், கருத்துலகம்.

எமது சமூகத்தின் பழைமைவாதக் கருத்துலகம் பெண்மையின் தன்மை பற்றி பொய்மைகளைப் புனைந்துவிட்டிருக்கிறது; பெண்மையை இழிவுபடுத்தும் படிமங்களைப் படைத்திருக்கிறது; பெண்மை பற்றிய தவறான எண்ணக்கருக்களை விதைத்து விட்டிருக்கிறது; இந்தச்சித்தாந்த உலகம் சிருஷ்டித்து விட்டிருக்கும் மனவுலகச் சுவர்களுக்குள் பெண்ணினம் சிறைப்பட்டுக் கிடக்கிறது.

பொருளுலகம், அரசியல் உலகம், சமூக உலகம், கருத்துலகம் என்ற வகையில் பல்வேறு பரிமாணங்களில் பெண் ஒடுக்குமுறையின் சிக்கலான அம்சங்களைச் சுட்டிக் காட்டும் பிரபாகரன் இறுதியாக, ஆண்-பெண் உறவின் அர்த்தத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்து விளக்குகிறார்.

''மனித உறவுகளில் அடிப்படையானது ஆண்-பெண் உறவு. இந்த உறவு சாதாரண சமூக உறவு அல்ல. இது மனித உயிர் இயக்கத்திற்கும், மனித இன விருத்திக்கும் மூலமானது. மனித இனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆதாரமானது'' என்று குறிப்பிடும் பிரபாகரன், ''ஆண்-பெண் உறவில் எழும் அபசுரங்களாகவே இன்று பெண்ணினம் எதிர் கொள்ளும் பல அவலங்கள் தோற்றம் பெறுகின்றன'' என்கிறார்.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சமூகப் பிரச்சினை, பாலியல்ரீதியான ஒரு அதிகார உறவுப் பிரச்சினை. இதில் உள்ள சமூக, அரசியல், பொருளாதார உறவுகளின் முரண்பாட்டுக் கோலங்களையும், சமூக எண்ண வியக்கத்தின் ஆதிக்கத்தையும் யாரும் மறுக்க முடியாது ஆயினும் இப் பிரச்சினையில் இன்னும் ஒரு பிரதான அம்சமாக ஆண்-பெண் உறவும், அதன் அகவுலகப் பரிமாணங்களும் இருக்கத்தான் செய்கிறது



பெண் விடுதலைக்குக் களம் அமைத்துக் கொடுத்த புலிகள் இயக்கத்துடன், ஆயிரமாயிரம் புரட்சிகரப் பெண்கள் அணிசேர்ந்து கொண்டனர். தேசிய விடுதலை, சமூக விடுதலை என்ற மூலாதாரக் கொள்கையின் அடிப்படையில், இராணுவ - அரசியல் கட்டமைப்புகளாக மகளிர் படைப் பிரிவும் மகளிர் முன்னணியும் உருவாக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. தென்னாசிய வரலாற்றிலேயே முதன் முதலாக, ஒரு முழுமையான மகளிர் படையணி தோற்றங் கொண்டது. போர்த்திறனும், துணிவும், தியாகமும் மிக்க பெண் போராளிகள் போர்க்களத்தில் பிரமிக்கத்தக்க சாதனைகளை ஈட்டினர். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய வரலாற்றுத் திருப்புமுனை ஏற்பட்டது.

''இந்த ஒடுக்குமுறைச் சிறையிலிருந்து விடுதலை பெறுவதானால், பெண்ணினம் முதலில் தனக்கெதிராக ஏவப்பட்டுவரும் ஒடுக்கு முறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொள்வதானால், பெண்ணினம் தனது இழி நிலை பற்றி விழிப்புக் கொள்ள வேண்டும். தலைவிதி என்றும், கர்ம வினையென்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழைமை என்றும், பண்பாட்டுக் கோலமென்றும் காலங்காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம், விழித்தெழ வேண்டும்'' என, விளக்கம் கொடுக்கிறார் பிரபாகரன்.

பெண்ணினத்தின் விடுதலைக்குப் பெரும் முட்டுக் கட்டையாக இருப்பது பெண்ணினத்தின் அறியாமையாகும். இது பெண்ணடிமைத்தனத்திற்கு ஒரு பிரதான காரணியாக இருந்து வருகிறது. எனவே, பெண்ணினம் முதலில் தன்னைப் பற்றி, தனது வாழ்க்கை நிலையைப் பற்றி, தனது சுதந்திரத்திற்கும், கௌரவத்திற்கும் இடையூறாக இருந்துவரும் சக்திகள் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தஅரசியல், சமூக விழிப்புணர்வு பெண் விடுதலைப் போராட்டத்திற்கு அத்திவாரமாகிறது.

''விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும்; அந்தப் போராட்ட சக்தியால்தான் ஒடுக்கு முறை விலங்குகளை உடைத்தெறிய முடியும்.'' என்கிறார் பிரபாகரன்.

தாம்பத்திய உறவு என்பது, மனித உறவுகள் எல்லாவற்றிற்குமே மூலாதாரமானது. குடும்பமே சமுதாயத்தின் மூலக்கூறு.

ஆண்—பெண் உறவும் அந்த உறவால் பின்னப்படும் குடும்ப வாழ்வும் ஒரு முரண்பாட்டுத் தளமாக மாறும்பொழுது, அந்த முரண்பாடுகளின் பூதாகர வெளிப்பாடுகளாக, பெண் ஒடுக்குமுறை வடிவங்கள் தோற்றப்பாடு கொள்கின்றன.

ஆணாதிக்கமும், அதனால் எழும் அதிகார உறவுகளும் நீங்கி பெண் சமத்துவம் நிலவுவதானால், ஆண் — பெண் உறவிலும் அடிப்படையான மாற்றங்கள் தேவை. மனவுலகப் புரட்சி தேவை. ஆண்களின் அக உலகில்தான் இந்தப் புரட்சிகரமான மாற்றம் அவசியமாகிறது. ஆணினத்தின் விழிப்புணர்விலும் புரிந்துணர்விலும்' இது தங்கியிருக்கிறது.

''ஆணும் பெண்ணும் ஒத்திசைவாக ஒருவர் மற்றவரின் சுதந்தரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து, குடும்ப வாழ்வின் பொறுப்புக்களைப் பகிர்ந்து, சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் பற்றுக்கொண்டு வாழ்ந்தால் இந்தப் பால்வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் ஆண் இனம் புரிந்து கொள்ளும் பொழுதுதான், ஆணாதிக்கமும் அதனால் எழும் அதிகார அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு'', என்கிறார் பிரபாகரன்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு, சிங்களப் படைக்குப்

அண்மைக் காலங்களில், சிங்களப் படைகளினால் இரண்டு பாரிய இராணுவ நடவடிக்கைகள் மணலாற்றில் எடுக்கப்பட்டன.

சென்ற ஆண்டு ஒகஸ்ட் 29 இல் இராணுவ நடவடிக்கை - மின்னல் எனும் பெயரில் வான் படையின் பாரிய பங்களிப்புடன், மிகப் பெரிய படையெடுப்பு நடவடிக்கை நடாத்தப்பட்டது.

இச் சமரில் இராணுவம் பெரும் இழப்புக்களைச் சந்தித்ததுடன், மணலாற்றுக் காட்டுக்குள் நுழைந்த வேகத்திலேயே திருப்பி அனுப்பப் பட்டுவிட்டது.

தமிழீழத்தின் இதயமான மணலாற்றைப் பாதுகாக்க இச் சமரில், 236 புலி வீரர்கள் வீரச் சாவைத் தழுவினர்.

அடுத்தது மார்ச் 17, 92ஆம் ஆண்டு, இராணுவ நடவடிக்கை - ஹயே பஹர எனும் பெயரில், பாரிய தொரு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது


படையெடுப்புத் தொடங்கப் பட்ட இடத்திலேயே சிறீலங்காப் படை எதிர்பாராத பேரிழப் பைச் சந்தித்ததோடு, கனரக ஆயுதங்களையும் (பின்னுதைப்பற்ற பீரங்கியும் அதில் ஒன்று) இழந்தது.

எம்மில் 46 புலிகள் வீரச் சாவை அணைத்துக் கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் நோக்கங்கள் பலவாகும். அந்த நோக்கங்களின் இலக்கு தமிழீழத் தேசியத்தைச் சிதைப்பது தான். அதாவது, வட - தென் தமிழீழத்தை நிரந்தரமாகத் துண்டாடி தென் தமிழீழத்தை விழுங்கி விடுவதுதான்.



படம் - 1



படம் - 2

எமது விடுதலைப் போர் காரணமாக, மணலாறு இன்னமும் முழுமையாகச் சிங்களக் குடியேற்றத்தால் விழுங்கப்படவில்லை.

1949 ஆம் ஆண்டு தொடங்கிய சிங்களக் குடியேற்றத்தின் மூலம் பட்டிப்பளை (கல்லோயா) பறிக்கப்பட்டுவிட்டது.

1948 இல் கந்தளாய், பதவியாவில் தொடங்கிய சிங்களக் குடியேற்றத்தின் மூலம், சேருவெல என்ற சிங்களப் பெயருடன் அப்பகுதிகளும் பறிபோய்விட்டன. சேருவெல என்று சிங்களத் தேர்தற் தொகுதியாக நிற்பதுடன் திருகோணமலை மாவட்டத்தின் 2/3 நிலப் பகுதியையும் அது தன்னுள் விழுங்கிவிட்டது.

அதேபோல மகாவலி ''அ'' வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் மூதூரில் சிங்களக் குடியேற்றத்தைத் தொடர இருக்கின்றார்கள். பழந் தமிழர் பகுதிகளான ஈச்சிலம்பத்தை, இளிவெட்டி, தெஹிவத்த, தோப்பு, சேருவெல ஆகிய பகுதிகளில் மேலும் 13,000 ஏக்கர் நிலப் பரப்பில் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டம் உள்ளது.

திருகோணமலை நகர வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில், நகரின் உள்ளும் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர். ஒட்டு மொத்தத்தில் திருகோணமலையைத் தனிச் சிங்கள மாவட்டமாக்க முயற்சிகள் வேகமாகச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அத்துமீறிய இக்குடியேற்றங்களை விரைவாகவும், பாதுகாப்பாகவும் செய்ய வேண்டுமாயின், மணலாறு சிங்களப் படையின் உள்ளங்கைக்குள் இருந்தால் சுலபமாகுமென அரசு கருதுகின்றது.

இவையெல்லாம் நடந்துவிட்டால் வட - தென் தமிழீழம் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு நிரந்தரமாகத் துண்டாடப் பட்டுவிடும்

1987 ஆம் ஆண்டு புலிகளின் குரல் எட்டாவது இதழில் (Voice of Tigers - 8) வெளிவந்த ஒரு கட்டுரையில் (படம் - 1), சிங்கள ஆய்வு வட்டத்தினரின் தமிழீழத் தேசியத்திற்கு எதிரான திட்டம் ஒன்று, வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

சிங்கள ஆய்வு வட்டம் (study group) என்பது சிங்கள புத்திஜீவிகளைக் கொண்டதொரு அமைப்பாகும். சிங்கள புத்திஜீவிகள் தமிழீழத் தேசியத்தை அழிக்க எப்படிப் பேரினவாத அரசிற்குத் துணைபோகின்றார்கள் என்பது தெளிவாகும். அத்திட்டத்தில் எக்காரணத்தைக் கொண்டும் வட தமிழீழ மக்களையும் மட்டக்களப்புத் தமிழர்களையும் இணைய விடக்கூடாது என்று, வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ் மாவட்டங்களிலேயே தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்காக, புதிதாக மாவட்ட எல்லைகள் பிரிக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் முக்கியமாக மன்னார், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் புதிய மாவட்டங்களாக மாற்றப்பட வேண்டுமெனவும், கூறப்பட்டுள்ளது.

**மணலாற்றை நாம் இழக்க முடியாது.<br>அது நிலம் மட்டுமல்ல; அதற்குள்தான்<br>தமிழீழத் தேசியத்தின் இதயமும் உள்ளது.**

அத்துடன் புதிதாக அமைக்கப்படும் மாவட்டங்கள் எப்படி அமைய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (படம்-1 ஐப் பார்க்கவும்). மன்னார் மாவட்டம் அநுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட வேண்டும். (அதன் பின் மன்னார் என்றதொரு மாவட்டம் இருக்காது: அது அநுராதபுர மாவட்டம் என்றே அழைக்கப்படும்). முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட எல்லைகள் மாற்றப்பட்டு புதிதாக மதவாச்சி எனும் மாவட்டம் உருவாக்கப்படும்.

மேலும், தமிழ் மக்களின் பகுதிகளில் பெரிய அளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு தமிழ் மக்களின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும், அந்தச் சிங்களப் புத்திஜீவிகளின் அமைப்பு எழுத்து வடிவத்தில் பதிந்துள்ளது.

1.3.92 ஐலன்ட் செய்தித் தாளில் பேராசிரியர் மத்தும பண்டார என்பவர், 'இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புவியியல் ரீதியான மாற்றம்' என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதையும் இங்கு பார்ப்பது நல்லது. இவரின் திட்டப் படி, மாகாண எல்லைகள் ஆற்று வடிநிலங்களைக் கருத்திற் கொண்டு மாற்றப்பட வேண்டும். (படம் 2 ஐப் பார்க்கவும்).

அத்துடன் வட மத்திய, மத்திய, சப்பிரகமுவா, ஊவா மாகாணங்களுக்குக் கடல் எல்லைகள் இல்லையென்ற குறையும் தீர்க்கப்படும் எனவும் கூறுகின்றார். (இப்படிச் செய்தால் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் சிங்கள மாகாணங்களுக்குள் அமிழ்ந்து போகும்).

இதன்மூலம் இலங்கைத் தீவின் 2/3 பங்கு கடற் பரப்பு வட-கிழக்கு மாகாணத்திற்குச் செல்வதைத் தடுக்கலாம் எனக் கூறியுள்ளார். இதன்மூலம், தமிழர்களிடம் இருக்கும் கடல் எல்லைகளைப் பறிக்கலாம்.

அத்துடன் மட்டக்களப்புத் தமிழர்கள் யாழ்ப்பாணத் தமிழர்களிடம் இருந்து வேறுபட்டவர்கள். அவர்களின் பண்பாடுகளிலும் வேறுபாடு உண்டு அவர்களின் பண்பாட்டு வேறுபாடுகளிற்கு மதிப்பளித்து அவர்கள் பிரிந்திருக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும், இச் சிங்களப் பேராசிரியர் கழிவிரக்கம் கொள்கின்றார்.

அதே போல 29.2.92 ஐலன்ட் செய்தித் தாளில் 'தமிழர் தாயகம் எதிர் சிங்களவர் தாயகம்' எனும் தலைப்பில், பேராதனைப் பல்கலைக்கழகப் புவியியற் துறையைச் சேர்ந்த கலாநிதி சாந்தா கெனநாயக்கா எழுதிய கட்டுரையில், சிங்களவர்களின் தாயகம் தமிழரின் தாயகத்தை உள்ளடக்கியிருக்கும் வேளையில், தமிழரின் தாயகம் சிங்களவரின் தாயகத்தைப் பிரிக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். அத்தோடு மலைநாடு எனும் பெயரில் சிங்களவரின் தாயகம் மேலும் துண்டாடப்படுகின்றதெனவும், கூறியுள்ளார்.

பொதுவாக நாட்டின் நலனுக்காகத் தமது நிலங்களை இழந்தவர்கள் சிங்களவர்கள்தான் எனக் கூறும் அவர், முதலில் பெருந்தோட்டங்கள் எனும் பெயரில் இந்தியத் தமிழர் சிங்களவரின் நிலத்தை எடுத்தனர். மகாவலி வளர்ச்சித் திட்டம் எனும் போர்வையில் தெல்தெனியா, கொத்மலை ஆகிய இடங்களில பெருமளவில் சிங்களவர்கள் தமது சொந்த நிலங்களை இழந்துள்ளனர் என்றும், கூறுகின்றார்.

எனவே நிலங்களை இழந்தவர்கள் தமிழர்கள் அல்ல; சிங்களவர்களே எனக், கூறுகின்றார்.

தமிழர்கள் சிங்களவர்களின் தாயகத்தில் வாழத் தயங்குவதில்லை. ஆனால் சிங்களவரைத் தமிழர் தாயகத்தில் வாழ விடுவதில்லை எனக் கூறும் அவர், சிங்களவர்கள் சிறீலங்காவைத் தமது எனக் குறிப்பிட்டுக் காட்டுவதைப் போல, தமிழர்கள் யாழ்ப்பாணத்தையும் அதன் அண்மைப் பகுதிகளையும் 'தமிழர் பண்பாட்டுத் தாயகம்' எனத் தம்மை அத்துடன் இணைத்துக் காட்டுவதில், அடிப்படையில் பிரச்சினை இல்லையென்று கூறுகின்றார்

# புதைகுழியாகட்டும்

1977 இற்குப் பின்தான் தமிழ்த் தேசியவாதிகள் கிழக்கு மாகாணத்தையும் சேர்த்து, தமது தனித்துவ தாயகக் கொள்கையை விரிவு படுத்தினார்கள் எனவும் கூறியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கொழும்பு பாராளுமன்றில் பேசும் போது "நாங்கள் (சிங்களவர்) எல்லைகளை நோக்கி நகராதுவிடின் எல்லைகள் எங்களை நோக்கி நகரும்" என்று குறிப்பிட்டார். இங்கே அவர் எல்லைகள் எனக் குறிப்பிட்டது தமிழர் தாயகத்தினது எல்லைகளைத்தான்"

வெளிப்படையாக இலங்கைத் தீவு ஒரு நாடு என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும் தமிழர் தாயகத்தைப்பற்றிய உண்மை யதார்த்தத்தை அவ்வப்போது சிங்களத் தலைவர்களும் மறைமுகமாக ஒப்புக்கொண்டிருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில் சிங்கள அரசியல்வாதிகளும், மதவாதிகளும், அறிவுழைப்பினர்களும் தமிழர் தாயகம் குறித்துத் தெளிவான எச்சரிக்கையான பார்வைகளைக் கொண்டுள்ளமை, எடுத்துக் காட்டப்படுகின்றது.

இதன் அடிப்படையிலேயே, தமிழீழத் தேசியத்திற்கு எதிராக அவர்கள் வகுக்கும் நாசகாரத் திட்டங்கள் துலக்கமான குறிக்கோள்களைக் கொண்டவையாக இருக்கின்றன.

அவர்களது கருத்துப்படி, தமிழர் தாயகம் துண்டாடப்பட வேண்டும்; கடற்பரப்பு மட்டுமல்ல, நிலப்பரப்பும் தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட வேண்டும்.

திருகோணமலையிலும், மணலாற்றுப் பகுதியிலும் உள்ள சிங்களப் படை முகாம்களின் எண்ணிக்கை அண்ணளவாக 157 ஆகும். இப் படை முகாம்களில் உள்ள சிங்கள ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 30,000 இற்கும் மேலாகும் இவர்களைத் தவிர சிங்கள ஊர்காவற் படையினரும், சிங்கள தேசியத் துணைப் படையினரும், சிங்களக் காவற் துறையினரும் பல்லாயிரக் கணக்கில் உளளனர்.

கேந்திர முக்கியத்துவம் மிக்க திருகோணமலை முழுமையாகச் சிங்களவர்கள் கையில் வரவேண்டும் என்பதே, அவர்களின் ஆசையும் நோக்கமும் ஆகும். அதை முழுமையாக நிறைவேற்ற மணலாறும் தம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே, சிறீலங்கா பேரினவாத சக்திகளின் உடனடி அபிலாசை ஆகும்.

அண்மையில் யாழ். பல்கலைக் கழக 'கைலாசபதி கலை அரங்கில்' 'தமிழீழ நோக்கு' இரண்டாவது இதழின் வெளியீட்டுக் கூட்டத்தில் திரு. மு. திருநாவுக்கரசு அவர்களால் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட இரண்டு விடயங்களை இங்கு நினைவூட்டுகின்றோம்.

1 இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில், அடுத்தடுத்துள்ள இரண்டு மாகாணங்கள் விரும்பினால் இணையலாமெனக் கூறப்பட்டுள்ளது.

வட - தென் தமிழீழத்திற்கு இடையில் 'வெலி ஓயா' எனும் புதிய மாவட்டம் உருவாக்கப் பட்டால், அது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், வட - தென் தமிழீழ இணைப்பைச் சட்டரீதியாகச் சாத்தியமற்றதாக்கும்.

2. 'மார்க்கியவல்லி' என்ற இத்தாலி தேசத்து அறிஞன் குறிப்பிட்டதைப் போல, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நடாத்தப்படும் அத்துமீறிய குடியேற்றம் என்பவை, நிரந்தர இராணுவ முகாம்களைப் போன்றே செயற்படும். இராணுவ முகாம்களை அமைப்பதிலும் பார்க்க அத்துமீறிய குடியேற்றங்களை அமைப்பது மிகுந்த பயனைத் தரும்; ஏனெனில், அவை நிரந்தரப் படைத் தளங்களாகச் செயற்படும்.

மணலாறு மீது அடுத்தடுத்து சிறீலங்கா அரசு நடாத்தி வரும் ...மர்களுக்கு, இன்னுமொரு இராணுவ நோக்கமுமுண்டு.

அதாவது, யாழ். குடாநாடு மீது பெரிய அளவிலான தாக்குதலை நடாத்த முன்பு மணலாற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்பதே, அதுவாகும். ஏனெனில், குடா நாட்டின்மீது இராணுவம் தாக்குதலை நடாத்தும் போது புலிகள் மணலாறு சென்று, இந்தியப் படையுடனான போர்க்காலத்தினைப் போல அதைப் பெரும் அரணாக மாற்ற விடக்கூடாது என, நினைக்கின்றார்கள்.

மணலாற்றை நாம் இழக்க முடியாது. அது நிலம் மட்டுமல்ல; அதற்குள்தான் தமிழீழத் தேசியத்தின் இதயமும் உள்ளது.

தமிழீழ மக்களுக்கு சிங்கள அரசின் கபட நோக்கத்தையும், திட்டத்தையும் உணர்த்துவதே இக் கட்டுரையின் நோக்கம்

பிரதானமாக தமிழ் அறிஞர்கள். அறிவுழைப்பினர்கள் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இனவாத சிங்கள அறிஞர்களினதும் புத்திஜீவிகளினதும் பேரினவாத முலாம் பூசப்பட்ட நியாயவாதங்களை அம்பலப்படுத்தி, தமிழ்த் தேசியத்திற்குச் சேவை செய்ய வேண்டியது, அவர்களின் கடமையும், பொறுப்புமாகும்.

இந்தியப் படை தமிழீழத்தில் என்ன செய்ததோ அதையே பின்பற்றி, சிறீலங்காப் படையும் தமிழீழத்தில் செயற்படுகின்றது.

1) கூடிய அளவில் எறிகணைகளைப் பயன்படுத்தல்.
2) தாங்கிகளைப் பயன்படுத்தல்
3) இந்தியப் படை முகாம் அமைத்த இடங்களில், முகாம்களை அமைப்பது.
4) தேச விரோதிகளின் துணையோடு விடுதலைப் புலிகளை அழித்து, தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பது.
5) போலி மாகாண சபை போல இராணுவக் கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் போலியாக நிர்வாகம் அமைப்பது.
6) தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வானொலிச் சேவைகளை நடத்துவது.
7) இராணுவ நடவடிக்கை குறித்துத் தொடர்ந்து பொய்களையும், புழுகுகளையும் சொல்வது.
8) இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி விடுதலைப் புலிகளைக் களங்கப்படுத்த முயற்சித்தல்.
9) மக்களைக் குண்டு வீசி அழிப்பது.

இந்தியப் படை புலிகளுடன் போராடச் சிங்களப் படை தகவல் கொடுத்து உதவியது; கடலில் காவல் நின்றது.

முடிவில் இந்தியப் படை தோற்றது.

இப்போது சிறீலங்காப்படை புலிகளுடன் போராட இந்தியப் படை தகவல் கொடுத்து உதவுகிறது; கடலில் தான் காவலிற்கு நிற்கிறது.

மணலாறு இந்தியப் படைக்குப் புதைகுழியானது.

அதேபோல, சிறீலங்காப் படைக்கும் மணலாறு புதைகுழியாகும். *

---

## மணலாற்றுப் பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள்.

### பிரதான முகாம்கள்

1. வெலி ஓயா தலைமை முகாம்.
2. வெலி ஓயா உப முகாம்.
3. முந்திரிக்குளம்
4. ஜானகபுர
5. கோட்டைக் கேணி
6. கொக்குத்தொடுவாய்
7. தென்னமரவடி
8. சிங்கபுர
9. கஜபாபுர (சிலோன் தியேட்டர் பாம்)
10. 10ஆம் கட்டை } புல்மோட்டை —அனுராதபுரம் வீதி.
11. 13ஆம் கட்டை }
12. கெம்பிலியாவெவ } நெடுங்கேணிப் பக்கமாக.
13. கோன்வெவ அல்லது கோங்வெவ }


### மினி முகாம்கள்

1. கென்ற் பாம்
2. சாம்பன் குளம்
3. துவரன் குளம்
4. கும்பகர்ணன் மலை

மேற்கூறியவற்றைவிட, வீதிகள் நெடுகிலும் காவலரண்கள் (15—30 பேர் வரை கொண்டவை) 50 இற்கு மேல்.

☆ சிறீலங்கா அரசு சூட்டிய சிங்களப் பெயர்களுடனேயே முகாம்களை இனங்காட்டியுள்ளோம்.

---




மணலாறும் சூழவுள்ள பகுதிகளும்

# தந்தையும் தனயர்களும்

சிறுகதை

செம்மலையின் ஜீவனாக, அந்தக் கிராமத்தைச் சுற்றியோடும் கிரவல் அடித்த சிவப்பு வீதி நெடுஞ்சாலையில் ஏறுகின்ற இடம். பூமணி மாமி, வளைவில்லாமல் — கரிய பாம்பு போல நீண்டிருக்கும் அந்த நெடுஞ்சாலையைக் கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றாள்.

'ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்.'

இன்று மட்டுமல்ல — அவள் இப்போது கொஞ்ச நாட்களாக இப்படித்தான். எங்கு சண்டை நடந்தாலும் கலவரம் தோய்ந்த விழிகளோடு — ஏக்கத்தோடு இந்த இடத்தில் நிற்பாள்.

அவளுடன் யாரும் கதைக்கமாட்டார்கள். அவளுக்காக ஒரு அனுதாபப் பார்வையை மட்டும் வீசிவிட்டு நகர்வார்கள்.

இரவுகள் பூமணி மாமிக்கு மிகக் கொடுமையானதாக இருக்கும். எதுவுமே விளங்காத வெறுமையான அமைதி இதயத்தை ஆக்கிரமித்திருக்கும். கிராமத்தை — மக்களை எல்லாம் அதிரவைக்கும் குண்டுச் சத்தங்கள் இவள் செவிகளிற்குள் செல்ல மறுத்து நிற்கும்.

விடிந்ததும், அந்தச் சந்திக்கு ஓடுவாள்.

'ஆனையிறவில சண்டை நடக்கிறதாம்.'

மெல்லிய பச்சை நிறத்தில் ஒரு வாகனம்; உள்ளுக்குள்ளும் பின்னுக்கும் சிலர் ஆயுதங்களுடன் நின்றனர். அந்த வீதியின் பள்ளம் திட்டிகளுக்கு ஏற்றமாதிரி, அழகாக வீதியைப் பிடித்துக்கொண்டு வந்த வாகனம் பூமணி மாமிக்கு அருகில் நின்றது.

"குணத்தான்ர அம்மா" என்றான் ஒருவன்.

அந்த வாகனத்தின் சாரதி ஆசனத்தில் இருந்தவன இறங்கினான. அவனது இடுப்புடன், நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது.

"அவ பேசமாட்டா" என்றான் அருகில் இருந்தவன். சாரதி ஆசனத்தில் இருந்தவனோ மிகப்பழக்கப்பட்டவன் மாதிரி கைகளை அசைத்து, மாமியுடன் இயல்பாகக் கதைத்தான்.

"ஏனம்மா நிக்கிறீங்கள்?"

"ஆனையிறவில சண்டை நடக்கிறது......" பூமணி மாமி, தனது கையசைப்பு அவனுக்கு விளங்கி விட்டதா என ஏக்கத்தோடு பார்த்தாள்.

"உங்கட மகனுக்கு ஒரு பிரச்சினையும் இல்லையம்மா. அப்படி ஏதும் என்றாலும் நான் வீட்டை வந்து சொல்லுறன். நீங்கள் போங்கோ" என்றான் அவன்.

அவள் தவறு செய்தவள் போல் கூச்சத்துடன் கீழே பார்த்தாள். பின் ஒருவாறு நிமிர்ந்தாள். அவளின் கண்களில் கனிவும் பாசமும் இருந்தன பூமணி மாமி திரும்பி நடந்தாள். கொஞ்சத் தூரத்தின் பின் திரும்பிப் பார்த்தாள். அவன் நடந்து கொண்டிருந்தான். இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருந்தது. குணத்தான் மாதிரி ஒரு பக்கம் இழுத்தபடி......

☆ ☆


பூமணி மாமியின் இரண்டாவது மகன் குணம் இயக்கத்திற்குப் போனதற்குப் பிறகு, அவள் இப்படித்தான், இரவுகளில் அமைதி அற்று தூக்கமில்லாமல் இருந்தாள். வார்த்தைகளற்ற குரலால்......, குணத்தானுக்குத்தான் ......, ஏதேதோ எல்லாம் பேசிக்கொண்டிருந்தாள்.

ஒரு நாள் — வானம் மப்புப் போட்டிருந்த காலை நேரம் குணத்தான் வந்தான். திண்ணையிலிருந்த சின்னையர் ஓடிப்போய் தன் மகனை மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருந்தார். சிவப்பியும் வெள்ளையனும் அவனைக் கண்டதும் ஓடிப்போய் தங்கள் வாலையும் பின்பக்கத்து உடம்பையும் வளைத்து வளைத்து, அவனுடன் ஒட்டிக்கொண்டே வரவேற்றன.

'வெட்கம் ரோசமில்லாத பிறவியள்.' — பூமணி மாமி கோபத்துடன் உள்ளே போய்விட்டாள்.

அவள் பெரிதாக விம்முவது கேட்டது.

குணத்தான் உள்ளே போனான், சின்னையர் வெளியே ஒதுங்கிக் கொண்டார். தாயும் மகனும் நீண்ட நேரமாக ஏதேதோவெல்லாம். பேசிக் கொண்டார்கள். ஒரு சின்னச் சிரிப்புடன் குணத்தான் வெளியே வந்தான். அவன் கைகளிலிருந்த 'சினைப்பர்' துப்பாக்கி இடை இடையே அழகாகவும் இயல்பாகவும் கை மாறிக் கொண்டது.



தகப்பன் மாதிரியே உயர்ந்து வளர்ந்து, அவரைப் போலவே கையில் ஒரு துப்பாக்கியுடன் முற்றத்தில் நடக்கும் மகனைப் பார்க்க, பூமணி மாமிக்குப் பெருமையாக இருந்தது மனதில் மகிழ்ச்சியாகவும இருந்தது.

"அவன் சின்னனிலேயே சரியாத் தகப்பனை மாதிரி."

குணத்தானுடன் தங்கச்சிகளும், தம்பிகளும், சின்னையரும், மாமியும் கூட அன்று இரவு முழுவதும் கதைத்தபடி இருந்தார்கள். விடிந்தவுடன் குணம் எழும்பிப் போய் விட்டான். கடைசித் தங்கை, அண்ணன் தன்னிடம் சொல்லாமல் போனதற்காக வீட்டில் எல்லோருடனும் சண்டைபிடித்தாள்; முகத்தை இரண்டு நாட்களாக உம் என்று வைத்திருந்தாள்.

ஊரில் கதை பரவியது.

"குணத்தான் சரியான திறமைசாலியாம் — குறிபார்த்துச் சுடுவதில் கெட்டிக்காரனாம்."

சில நாட்கள் சென்றன. குணத்தானுக்கு அடுத்ததாகப் பிறந்த செல்வனும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டான்.

"குணத்தானும் இயக்கத்திலதானே இருக்கிறான். மூத்தவனும் யாழ்ப்பாணத்தில இயக்க வேலைகள் செய்துகொண்டு இயக்கமாகத்தான் திரிகிறான். நீ போய்க் கேட்டால் செல்வனை வீட்டை விடுவாங்கள்" என்று, சிலர் சொன்னார்கள். பூமணி மாமி அமைதியாக இருந்தாள். குணத்தான் சொல்லிவிட்டுப் போனது நினைவிற்கு வந்தது.

"இந்த மண்ணில நாங்கள் வாழ வேண்டும் என்றால் நாங்கள் தானேம்மா போராட வேண்டும்?"

அன்று தொடக்கம்தான் பூமணி மாமி இப்படி, எங்கு சண்டை நடந்தாலும் இந்தச் சந்திக்கு வந்து ஏக்கத்தோடு காவல் நிற்கத் தொடங்கினாள்.

நாட்கள் சென்றன, சின்னையர் இலக்கில்லாமல் எதையோ சிந்தித்தபடி அலைந்து திரிந்தார். சில நேரங்களில் நாய்களைக் கூட்டிக் கொண்டு களப்புக் கரைகளில் வேட்டைக்குப் போனார். மற்றும்படி நிலத்தையும் வானத்தையும் பார்த்துக்கொண்டு கடற்கரையில் நின்றார். இருந்தாற் போல் ஒரு நாள் சின்னையர் தோளில் ஒரு துப்பாக்கியைச் சுமந்து வந்தார். முகம் தெளிவாகவும் மகிழ்ச்சியாகவும் இருநதது.

"நான் துணைப்படையில இருக்கிறன்" என்றார். பூமணி மாமிக்கு எதுவுமே புரியவில்லை. சின்னையரில் அவளுக்கு உயர்ந்த அன்பும், மதிப்பும் இருந்தது. அவர் செய்வது எதுவென்றாலும் அது சரியாகத்தான் இருக்கும். இல்லை என்றால் சின்னவயதில் அவரின் சொந்தங்கள் எல்லாம் எதிர்த்தபோதும் அவர் பூமணியைக் கைப்பிடித்திருக்க மாட்டார்.

☆ ☆

சின்னையருக்கு அப்போது இளம் வயது. ஒரு தேக்கு மரம் மாதிரி உயர்ந்த உறுதியான தோற்றம். வேட்டை என்றால் அவருக்கு ஒரு கலை. குறிவைத்தால் இலக்குத் தவறாது. அவரின் தேகத்தில் கட்டை ஏறுவது மாதிரி — துப்பாக்கி இறங்குவதும் குறைவு.

பூமணிமாமியைப் பார்த்தவுடன் சின்னையர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

"அவள் வாய் பேசமாட்டாள்— காதும் கேளாது, இவளையோ கட்டப் போறாய்" எனறு சொந்தங்கள் கிளர்ந்தன.

"அது பிரச்சனை இல்லை, வாழப் போறது நான்." சின்னையர் உறுதியாகக் கூறிவிட்டு பூமணியைக் கூட்டிக்கொண்டு போய்விட்டார். அதன் பின்புதான் வெறும் பூமணியாய் இருந்த மாமி அந்தக் கிராமம் முழுவதும் பூமணி மாமியாகிவிட்டாள்.

அந்த மணற்காணிக்குள் இருக்கும் சின்னக் குடிசையில்தான் அவர்களின் குடும்ப வாழ்க்கை ஆரம்பித்தது.

அடுத்த வருடமே மூத்தவன் பிறந்தான். சின்னையர் முன்பக்கமாக ஒரு 'மால்' அமைத்துக் கொண்டார். குணமும், செல்வனும் பிறந்து அடுத்தடுத்து இரண்டு பெண்களும் பிறந்தவுடன் குடும்பம் பெரிதாகி விட்டது. பெரிதாக வசதி இல்லாவிட்டாலும், அவர்களின் வாழ்க்கை பட்டினி இல்லாமல் தொடர்ந்தது.

வீடுமுழுவதும் குழந்தைகள் தவழ்ந்த அந்த நேரங்களில் சின்னையர் ஊர் சுற்றுவதைப் பெரிதும் குறைத்துக் கொண்டார். தனது குஞ்சுகளுக்கும் தாய்க் குருவிக்கும் பாதுகாப்பளிப்பதற்காக, கூட்டை விட்டு விலகாமல் கூட்டையே சுற்றி வரும் ஆண் குருவி போல, சின்னையர் வீட்டையே சுற்றி வந்தார்.

இரவு நேரங்களில் குழந்தைகளின் அழுகைக்குரல் பூமணிக்குக் கேட்பதில்லை. சின்னையர் எழும்புவார்; மனைவியின் தூக்கத்தைக் கலைக்காமலேயே குழந்தைகளைத் தூங்க வைப்பார். சின்னையருக்குக் கஷ்டம் தரக்கூடாது என்பதற்காக, அணையக் காத்திருக்கும் குமிழி விளக்கின் வெளிச்சத்தில் சில நேரங்களில் பூமணி விழித்திருப்பாள். அந்த நேரங்களிலதான் சின்னையர் எரிந்து விழுவார்.

"பேசாமல் படப்பா; நான் எழுப்பி விடுவன்தானே" என்பார், சினத்துடன்.

பூமணி மாமிக்கு உள்ளம் குளிரும். தன் கணவன் தன்னில் வைத்திருக்கும் பாசத்தை நினைத்து அவள் கண்ணில் கண்ணீர் கோலமிடும்.

குணத்தானில் மட்டும் பூமணி மாமிக்கு ஏதோ இனந்தெரியாத அந்த அன்பு — 'அவன் சரியாத் தகப்பனை மாதிரி.'

☆ ☆

மணலாற்றில் சண்டை தொடங்கிவிட்டது.

பூமணி மாமிக்கு இப்போது ஓய்வில்லை; ஒரே வேலை. அந்தச் சந்திக்குப் போகவும் கலவரத்துடன் காத்திருக்கவும் அவளுக்கு நேரமில்லாமல் போய்விட்டது.

சின்னையர் திண்ணையில் காவலிருப்பார். காட்டுக்குச் சாப்பாடு கொண்டுபோக வேண்டும். அவரது துப்பாக்கி கைகளில் இறங்காமல் எப்போதும் கிடக்கும் ஒரு நாள, பூமணி மாமியின் கடைசி மகன் விழுந்தடித்து ஓடிவந்தான்:

"அம்மா, குணம் அண்ணை எங்கட ஊருக்காலை காட்டுக்குப் போகிறார்" என்றான்.

பூமணி மாமி சேலைத் தலைப்பை உதறியபடியே வெளியே வந்தாள்.

"உங்களை வரவேண்டாமாம். தான் போகேக்கை உங்களைப் பாக்க வாறதாம்." அவன் தயங்கியபடியே மெதுவாகச் சொன்னான். பூமணி மாமிக்குக் கோபம். விளங்காத வார்த்தைகளால் ஏதேதோவெல்லாம் ஏசினாள். சின்னையர் எழுந்து வாசலுக்கு வந்தார்.

"மகன், உடைஞ்சு கிடக்கிற பள்ளிக் கூடத்தைப்பார்த்துக் கொண்டு நிக்கிறான்" என்றுவிட்டு மண்டாடிக் கிழவர் சென்றார். சின்னையர் அந்த இடத்திற்குப் போகு முன்பே, அவன் போய் விட்டான்.

பூமணி மாமிக்கு இப்போது ஒரே வேலை. அவள் ஒரு இடத்தில் நிற்காமல் சுழன்று கொண்டிருந்தாள்.

சின்னையர் காத்திருப்பார், காட்டுக்குச் சாப்பாடு கொண்டு போக வேண்டும். இரவிலும் பகலிலும் மாமியின் அடுப்புப் புகைந்து கொண்டிருக்கும். இடை இடையே அவளின் நினைவுகள் பிள்ளைகளிடம் செல்லும்.

'மூன்று பேரும் எங்கெங்கயோ-எப்படியோ? அதுவும் குணத்தான் காட்டுக்கை போயிருக்கிறான்.' அவள் விழிகள் கலங்கும். நாட்கள் சென்று கொண்டிருந்தன. மணலாற்றில் சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு பகற் பொழுதில், பூமணி மாமி அடுப்புடன் போராடிக் கொண்டிருந்த போது ...... மாமி நெடுகவும் காத்திருக்கும் அந்தக் கரிய நெடுஞ்சாலையால் — ஏழு எட்டு உடல்களைச் சுமந்து கொண்டு ஓர் அழுக்குப் பச்சை வாகனம், செம்மலையைக் கடந்து மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# தந்தையும்....

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் பூமணி மாமியின் இரண்டாவது மகன் குணத்தானும்......

☆ ☆

சின்னையரின் படலைக்குள் நான்கு ஐந்து இளைஞர்கள் நின்றனர். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருந்தன. சின்னையர் எழுந்து சென்றார். சின்ன மகளும் அவருக்குத் தெரியாமல் பின்னால் போனாள் சின்னையருக்கு அவர்கள் ஏதோ இரகசியமாக......

சின்னவள் ஓடி வந்தாள்.

''அம்மா — குணமண்ணை......'' பூமணி மாமி வெளியே வந்தாள். சின்னையர் தளர்நத நடையுடன் வந்து கொண்டிருந்தார்.

'' என்ன ...... என் ...... ன...... ப்பா......?''

'' குணத்தான் ......''

பூமணி மாமி வீட்டுக்குள் ஓடினாள் நிலையில் தலையை அடித்தடித்து ஏதேதோ எல்லாம் சொல்லி அழுதாள். அவளின் மனதின் தாகங்களை வெளிப்படுத்த முடியாமல், வார்த்தைகளைப் பேசும் சக்தி அற்று— இதுவரை நாளும் கதைகளைப் பேசிய கைகள் அர்த்தமற்று அசைந்தன.

காற்றுக்கு மட்டும் விளங்கும் அவள் குரல், ஊர் முழுவதும் இதயத்தை வெடிக்க வைத்துவிடும் சோகத்துடன் பரவியது. சின்னையர் தளர்வுடன் திண்ணையில் இருந்தார்; கைகள் துப்பாக்கியை இறுகப் பற்றியவாறே இருந்தது.

அன்று கடற் காற்று மிக மோசமாக இருந்தது அலைகள் பெரிய சத்தத்துடன் — கரையை மோதின. தென்னைகள் நிலத்தைத் தொட்டுவிடுமாற் போலத் தடுமாறின. கடலில் பீரங்கிப் படகு ஒன்று அவலப்பட்டு அங்கும் இங்கும் ஓடி ஓடியே கண்டபடி குண்டுகளை வீசியது. இராட்சத விமானங்கள் இரவிலும் வந்து, குடிமனைகள்மீது குண்டுகளைப் போட்டன.

''அவங்களிலையும் சரியான இழப்பாம்.'' ஊர் கூடிப் பேசிக் கொண்டது.

☆ ☆

பூமணி மாமியின் மூத்த மகன் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தான். தன்னால் இயன்ற மட்டும் விடாமல் அழுதான். பூமணி மாமி, சிறுவயதில் செய்த மாதிரியே அவன் தலையை ஆறுதலாகத் தடவிவிட்டாள்.

சின்னையர் இப்போதெல்லாம் இரவும் பகலும் காவலுக்குப் போகத் தொடங்கிவிட்டார். அந்தத் துப்பாக்கி அவரின் உடலுடன் ஒன்றிப் போய்விட்டது.

ஊரில் கதை பரவியது

'செல்வனும் சரியான திறமைசாலியாம்.''

' அவன் குணத்தானை மாதிரி— தமையனை மாதிரி — அவனும் கெட்டிக்காரன்.' மாமி மனதிற்குள் சொல்லிச் சொல்வாள். இப்போதும், எங்கு சண்டை நடந்தாலும் பூமணி மாமி, அந்தப் பாம்பு போன்ற கரிய நெடுஞ்சாலையை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு நிற்பாள்.

அந்த அழகான பச்சை நிற வாகனம், வீதியை ஒட்டிப்பிடித்தபடியே அமைதியாக வரும்; பூமணி மாமியைக் கண்டதும் நிற்கும். பூமணி மாமிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் அந்த அன்பு நிறைந்த — கனிவான இளைஞன், இறங்கி வருவான். அவனது இடுப்பில் நட்சத்திரம் இடப்பட்ட கைத்துப்பாக்கி அழகாகப் பொருந்தி இருக்கும். குணத்தான் மாதிரி ஒரு பாசம் இழுத்தபடியே, அவன் நடந்து வருவான்.

✲

# பெண் விடுதலையும் - புலிகளும்

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண் விடுதலை சம்பந்தமாக பிரபாகரனின் தத்துவார்த்தக் கண்ணோட்டத்தை இங்கு பார்த்தோம். பிரபாகரனின் கருத்துக்கள் பெண் பிரச்சினை சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கம் வரித்துள்ள குறிக்கோள்களையும், கொள்கைத் திட்டங்களையும் எடுத்து விளக்குவதாகவும் அமையப் பெற்றிருக்கிறது. ஒரு விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன்மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப் பாதையில் வெற்றிபெற முடியும்என்பதும், அப்பொழுது தான் போராட்டமும் முதிர்ச்சி பெற்று முழுமை பெறும் என்பதும், பிரபாகரனின் கருத்து.

பெண் விடுதலை சம்பந்தமாக தத்துவார்த்தக் கோட்பாடுகளை மட்டும் வரித்துக் கொள்வதில் அர்த்தமில்லை. கொண்ட கொள்கையை உருப்படியான முறையில் நடைமுறைப் படுத்தி வெற்றிகாண வேண்டும் என்பதில், பிரபாகரன் உறுதியான நம்பிக்கை உடையவர். இதன் பிரகாரம் 1984 ஆம் ஆண்டிலிருந்தே விடுதலைப் புலிகள் இயக்கம் பெண் விடுதலை அமைப்புகளைக் கட்டியெழுப்பியது.

பெண் விடுதலைக்குக் களம் அமைத்துக் கொடுத்த புலிகள் இயக்கத்துடன், ஆயிரமாயிரம் புரட்சிகரப் பெண்கள் அணிசேர்ந்து கொண்டனர். தேசிய விடுதலை, சமூக விடுதலை என்ற மூலாதாரக் கொள்கையின், அடிப்படையில், இராணுவ — அரசியல் கட்டமைப்புகளாக மகளிர் படைப் பிரிவும், மகளிர் முன்னணியும் உருவாக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது. தென்னாசிய வரலாற்றிலேயே முதன் முதலாக, ஒரு முழுமையான மகளிர் படையணி தோற்றங் கொண்டது. போர்த் திறனும் துணிவும், தியாகமும் மிக்க பெண் போராளிகள் போர்க் களத்தில் பிரமிக்கத்தக்க சாதனைகளை ஈட்டினர்; தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு வரலாற்றுத் திருப்புமுனை ஏற்பட்டது.

'' மண்மீட்புப் போர்க்களத்தில் இன்று தமிழ் இளம் பெண்கள் ஆயுதம் ஏந்தி நிற்கிறார்கள். முழு உலகமுமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களைச் செய்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை, நான் பெருமிதத்துடன் கூற முடியும். தமிழீழப் பெண்ணினத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புரட்சிகரமான திருப்பத்தைக் குறித்து நிற்கிறது'', என்கிறார் பிரபாகரன்.

இவ்விடயத்தில் தலைவர் பிரபாகரன் மட்டுமன்றி, முழுத் தமிழினமுமே பெருமை கொள்ளவேண்டும்.

✲

# விடுதலைப் புலிகளின்....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களக் கடற்படை வைத்திருந்த கடல் ஏகபோகம் உடைந்து சிதறியது.

தமிழ் மக்களாகிய நாம் ஒரு யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைக்கான போராட்டம் நிலங்களை விடுவிக்கும் அளவிற்கு முன்னேறிய போது, சிறீலங்கா அரசானது கடல் மூலமே தனது படை பலத்தைப் பிரயோகித்து, எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்று வருவதை நாம் கண்டு வருகின்றோம். அதாவது தரை யுத்தத்தை வெல்ல எதிரி கடலையே பயன்படுத்தி வருகின்றான்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியைக் கைப்பற்ற 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நடாத்திய போதும், 1990 ஆம் ஆண்டு மூல்லைத்தீவு முகாமை நாம் வெற்றி கொள்ள முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு சிலாவத்துறை முகாமை நாம் கைப்பற்ற முயன்ற சமயத்திலும், 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரின்போது எம்மிடம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்த ஆனையிறவுத் தளத்தைப் பாதுகாக்கும்போதும், சிறீலங்கா அரசு கடல் வழி மூலமே தனது பலத்தைப் பிரயோகித்து, எமது முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றது.

இதற்குப் பிரதான காரணம் எமது கடலில் எதிரி வைத்திருந்த கடல் ஏகபோகம்தான்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் அடிக்கடி கூறுவார்: புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது. எனவே, கடற் பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப் பகுதியை நிரந்தரமாக நிலை நிறுத்திக் கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப் பகுதிகளில் இருக்கும் எதிரிப் படையையும் விரட்டியடிக்க முடியும்.

ஒரு கடற்படையை நாம் கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஏராளமான பொருட் செலவைச் சந்திக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தரைச் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள், உபகரணங்களின் பெறுமதியைவிடக் கடற் சண்டைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுத உபகரணங்களின் பெறுமதி மிக மிக அதிகமாகும். எனவே ஒரு கடற் படையைக் கட்டி வளர்க்கப் பொருளாதார பலமும் தேவை.

தமிழீழத்தைப் பொறுத்த வரை வெளியுலகத் தொடர்புகளுக்கும், போராட்டத்திற்குத் தேவையான விநியோகங்களுக்கும், அதற்குரிய செயற்பாடுகளுக்கும் கடலே பிரதான வழியாக இருக்கின்றது.

எமது தரை எல்லையை (சிறீலங்காவுடனானது) இதற்கு நாம் பயன்படுத்த முடியாது.

எனவே போக்குவரத்து, விநியோகங்கள், உலகத் தொடர்புகள், யாவுமே கடல் மூலமே உள்ளன

எனவேதான் எதிரி வைத்திருக்கும் கடலாதிக்கத்தைத் தகர்த்து கடற் பரப்பில் அவனது நடமாட்டத்தைத் தடுக்க வேண்டியது. மிகமிக அத்தியாவசியமானது. அப்போது தான் எமது தாயகப் போர் வெற்றிபெற முடியும்.

1984ஆம் ஆண்டிலிருந்து கடற் புலிகள் என்ற பெயரால் அழைக்கப்பட்ட எமது கடல் அணி, 1991ஆம் ஆண்டு பிற்பகுதியில் 'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' என்ற புதிய பெயருடன் பெரியளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

இக்காலத்தில் இதன் சிறப்புத் தளபதியாக திரு. சூசை அவர்களும், தளபதியாக திரு கங்கை அமரன் அவர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இக்காலத்திலேயே சிறீலங்காக் கடற்படையினர் மீது கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள காவல் அரண்கள் மீதும், பல வெற்றிகரமான தாக்குதல்களைக் கடற்புலிகள் நிகழ்த்தினர்.

இத்தொடரான தாக்குதல்களின் போது, கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட விசைப் படகுகள் சில பல்வேறு முனைகளிலும் தாக்கி அழிக்கப்பட்டன.

ஆனையிறவு கடல்நீரேரியில் வைத்து 41 அடி நீளமான அதிவேக சண்டைப் படகொன்று, கடற் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன், நடுக் கடலில்வைத்து சிங்களக் கடற்படையுடன் வெற்றிகரமான படகுச் சண்டைகளிலும் கடற் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இக் கடற் தாக்குல்களிலும் கடற் சண்டைகளிலும் கணிசமான சிங்களக் கடற்படையினர் கொலலப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கடற் கண்ணித் தாக்குதல்களை நிகழ்த்துவதில் இருந்து, நவீன மயபபடுத்தப்பட்ட சிங்களக் கடற் படைக்கெதிராக நேரடித் தாக்குதல்களையும், கடற் சண்டைகளையும் நடத்தக்கூடிய அளவிற்கு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினர் பெற்ற வளர்ச்சி, சிறீலங்காவின் படைத்துறைத் தலைமையைத் திணறடித்துள்ளது. இதன் காரணமாக, கடற் படையின் பலத்தை நம்பிப் போராட்டத்தை நசுக்க அவர்கள் உருவாக்கிய, நீண்ட கால நோக்கிலான போர் முறைத் திட்டமும் கேள்விக் குறியாகிவிட்டது.

அத்துடன் அண்மைக் காலத்திலிருந்து, தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற் படையின் மேலாதிக்கம் படிப்படியாகச் சரிந்து கொண்டிருப்பதையும் காணலாம். அதனால் தமிழீழம் மீதான தனது ஆக்கிரமிப்புப் போர் மிகப் பெரிய பின்னடைவை எதிர்நோக்குவதையும், சிங்கள ஆளும் வர்க்கம் உணரத் தொடங்கியிருக்கும்.

தமிழீழக் கடலன்னை தியாகத்தாலும், சோகத்தாலும் உருவான ஒரு மகத்தான காவியத்தைத் தன்னுள் கொண்டிருக்கின்றாள்.

எத்தனை இனிய தோழர்கள்,
எவ்வளவு திறமையான கடலோடிகள்,
மீனுக்கு இணையான நீச்சல்காரர்கள்,
தியாகத்தின் உயர் வடிவமான கடற் கரும்புலிகள்.

சாவு வரும் என்பதைத் தெரிந்தும் இவர்கள் பயணம் போனார்கள். ஒவ்வொரு முறையும் அவர்கள் பயணம் போனபோது கரையிலே நின்று கைவிசி அனுப்பி வைத்தோம். ஆனால் நாம் பார்த்துக்கொண்டிருந்த போதே, அந்தப் பரந்த கடலோடு கரைந்து போனவர்கள் பலர்.

தமிழீழக் கடலன்னையின் மடியிலேயே இரவும் பகலும் கிடந்து, பனியையும் குளிரையும், தம்முயிரையும் பாராது கடலோடிய தமிழீழத் தாயின் புதல்வர்களில் எத்தனையோ பேர், அந்த உப்பு நீருடனேயே சங்கமமானார்கள்.

இது எங்கள் கடல்; இது தமிழீழத் தாயகத்தின் இணைபிரியாத ஒரு அங்கம். அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து இது மீட்கப்பட வேண்டும் அதற்காகவே கடற் புலிகள் உயிரையும் மதியாது பயணம் போய், உன்னதமான தியாகங்களைப் புரிந்து, வீர காவியங்களைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்

ஒரு நாள் நிச்சயமாக எங்களின் கடற்படைக் கப்பல்கள் எங்களின் கடலில் பவனிவரும்; அப்போது எங்களின் இளைய பரம்பரையினர் பயமின்றி, சுதந்திரமாக எங்களின் கடலில் உலா வருவார்கள்.

✲

## பிழை திருத்தம்

மாசி - 1992, 'விடுதலைப் புலிகள்' இதழில் இடம்பெற்றுள்ள சிறீலங்காவின் இராணுவ இயந்திரமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் என்ற கட்டுரையில், கோடி ரூபா என வரும் இடங்களிலெல்லாம் மில்லியன் ரூபா எனத் திருத்தி வாசிக்குமாறு, கேட்டுக்கொள்கிறோம்; தவறுக்கு வருந்துகிறோம்.

# தேசத்துரோகமும் மரணதண்டனையும்

தேசத் துரோகத்திற்குத் தண்டனையாக மரணதண்டனையைக் கொடுப்பதென்பது, உலகின் எல்லா நாடுகளிலும் இருந்து வரும் சட்டரீதியான ஒரு நடைமுறையாகும். அதுவும் போர்க்காலங்களில் அல்லது நெருக்கடியான காலகட்டங்களில் தேசத்துரோகத்திற்கான தண்டனையைச் சம்பந்தப்பட்ட நாடுகள் எல்லாமே, மிகமிகத் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றன. எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து, இத்தண்டனை முறையை நாங்களும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

தேசத் துரோகம் என்பது மனிதர்கள் செய்யும் அனைத்துக் குற்றங்களையும் விட மிகக் கொடியதொரு குற்றச் செயலாகும். உலக நாடுகளது சட்டங்களும் இதை ஏற்றுக்கொண்டு குற்றங்களுள் மிகக் கொடூரமான குற்றமாகத் தேசத் துரோகத்தைச் சித்திரித்து, தண்டனைகளுள் அதிஉயர் வடிவமான மரண தண்டனையை அவர்களுக்கு வழங்குகின்றது.

ஒருவன் தான் பிறந்து வாழ்ந்த மண்ணுக்கு, தனது மக்களுக்கு, தனது தேசியத்திற்கு எதிரிகளுடன் சேர்ந்து நாசம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடும்போது, அவன் அதிஉயர் தண்டனையாக மரணதண்டனையைப் பெறவேண்டும் என்பதையே, தேசத்துரோகத்திற்காக உலகம் முழுவதுமுள்ள சட்டபூர்வமான தண்டனைமுறை வெளிப்படுத்துகின்றது.

துரோகம் என்ற செயலை, துரோகிகள் என்ற நபர்களை, மனித குலம் என்றுமே வெறுத்து ஒதுக்கியே வருகின்றது

ஒரு துரோகியினது உயிர் தண்டனை மூலம் பறிக்கப்படுவதையிட்டு அவன் வாழ்ந்த சமூகம் கவலை கொள்வது இடையாது.

ஒரு நாட்டினது அல்லது ஒரு தேசிய இனத்தினது தேசிய அபிலாசைகளுக்கு எதிராக எதிரிகளுடன் சேர்ந்து செயற்படுதலையே பொதுவாகத் தேசத் துரோகம் என அழைப்பர்.

அதாவது தனது சொந்த மண்ணினதும் மக்களினதும் தேசிய அபிலாசைகளுக்கு எதிராக, எதிரிகளுக்குத் தகவல்களைக் கொடுத்தல்,

சொந்த மண்ணினது பாதுகாப்பு இரகசியங்களை, மறைவிடங்களை எதிரிக்குக் காட்டிக் கொடுத்தல்,

தனது சொந்தத் தேசியத்தை அல்லது நாட்டை அழிக்கும் வகையில் எதிரிக்காக உளவு நடவடிக்கையில் ஈடுபடுதல்,

எதிரிகளின் விருப்பப்படி தனது சொந்த நாட்டின் தலைமையை அழிக்க எதிரியுடன் சேர்ந்து செயற்படுதல் போன்றவற்றை, தேசத் துரோகங்கள் என்ற வகைக்குள் அடங்கும் பிரதான செயல்களாகக் கொள்ளலாம்.

ஒரு தேசியத்தினது அல்லது தேசத்தினது தேசிய அபிலாசைகள் எனும்பொழுது பிரதானமாக அதன் சுதந்திரம், இறைமை, கௌரவம், அந்த மக்களின் நிம்மதியான சுபீட்சமான வாழ்வு, என்பவை உள்ளடங்கியே இருக்கும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அத்தேசிய அபிலாசைகளுக்கு எதிராக எதிரியுடன் இணைந்து செயற்படுதல், தேசத் நுரோகம் ஆகும்

இதில் அரசியற் கருத்து வேறுபாடென்றோ, தனிமனித அபிலாசைகள் என்றோ காரணங்கள் கற்பிக்க முடியாது; அதை எந்தவொரு நாட்டினது சட்டமும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டாது.

என்னதான் அரசியற் கருத்து வேறுபடுகள் இருந்தாலும், தலைபோகின்ற தனிமனித அபிலாசைகளாக இருந்தாலும், தனது சொந்தத் தேசியத்திற்கு அல்லது தேசத்திற்கு எதிராக எதிரியுடன் இணைந்து இரண்டகம் செய்வதை உலகின் எந்தப் பண்பாடும், சட்டமும் அனுமதிக்க மாட்டாது; அவற்றை எல்லாம் தேசத் துரோகம் என்றே அவைகள் அறைந்து சொல்லும்.

பொதுவாக தேசத் துரோகங்கள் போர்க் காலங்களிலேயே அதிகளவில் நிகழும்

போரில்லாக் காலங்களில் நிகழும் தேசத் துரோகங்களைவிட, போர்க் காலங்களில் நடைபெறும் தேசத் துரோகங்களே மிகமிக ஆபத்தானவையாக இருக்கும்.

அதிலும் குறிப்பாக, விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் தேசிய இனங்கள் அல்லது தேசங்களுக்குள்ளிருந்து நிகழும் தேசத் துரோகங்கள்தான் மிகப்பெரிய அநர்த்தங்களை, அழிவுகளைச், சம்பந்தப்பட்ட மக்கள் மத்தியில் உண்டாக்குகின்றன.

எனவேதான் விடுதலைப் போராட்டங்கள் நடைபெறும் மண்ணில் நடக்கும் தேசத் துரோகங்களுக்கு, எந்தவிதமான தயக்கங்களுமின்றி போராட்ட இயக்கங்கள் மரண தண்டனையை வழங்குகின்றன.

தமிழீழப் போராட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால், போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தேசத் துரோகச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக, இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிரான போர்க் காலத்திலேயே நாம் மிகப் பெரியளவில் தேசத் துரோகத்திற்கு முகம்கொடுத்திருந்தோம். அத்துரோகங்களை எதிர்த்துப் போராடி வென்றதன்மூலம், எமது விடுதலைப் போராட்டத்தையும் வளர்ச்சியை நோக்கிய ஒரு கட்டத்திற்கு வளர்த்தெடுத்துள்ளோம். அதிற் சம்பந்தப்பட்ட துரோகிகளை அழிப்பதன் மூலம் தேசத் துரோகத்திற்குரிய தண்டனையை அவர்களுக்கு வழங்கியிருந்தோம்.

தமிழினம் பல்லாண்டு கால வரலாறுகொண்ட உலகின் மூத்த குடிகளுள் ஒன்று என, எமது மக்கள் பெருமிதம் கொள்கின்றார்கள்.

ஆனால் பலநூறு வருடங்களாக நாங்கள் அரசிழந்து, ஆட்சியிழந்து, அடிமைகளாகவே வாழ்ந்துவந்திருக்கின்றோம். இதற்குப் பிரதான காரணம் எமது இனத்திடையே வேரூன்றியிருந்த தேசத் துரோகங்கள்தான்.

இத் தேசத் துரோகங்களினால் எமது அரசை அந்நியர்களிடமும் எதிரிகளிடமும் இழந்ததுடன், எமது இனத்தின் அரசுகளை எமது இனத்தின் துரோகிகள் அழித்தார்கள்.

எமது இனத்தில் காலத்திற்குக் காலம் தோன்றிய எட்டப்பர்களும் காக்கை வன்னியர்களும் எமது இனத்தின் வீர வரலாற்றையே, மானவாழ்வையே, அடிமைத்தனத்திற்குள் இழுத்துச் சென்றதை தமிழர்களின் வரலாறு சொல்லும்.

இன்று புலிகளாகிய நாங்கள் தமிழர்களுக்கென ஒரு தனியரசை தமிழீழத்தில் அமைக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். எமது இனத்தின் எதிரிகளுடன் போர் புரிந்து வெற்றிபெறுவதுடன் மட்டுமல்ல, துரோகத்தனங்களையும் அடியோடு களைவதன் மூலமுமே எமது இலட்சியமான தமிழீழத் தனியரசை அமைக்க முடியும்.

தேசத் துரோகக் குற்றத்திற்கு அதி உயர் தண்டனை மரண தண்டனைதான் என்றே, உலக நாட்டுச் சட்டங்களும் கூறுகின்றன.

ஆனால் புலிகளாகிய நாங்கள் தேசத் துரோகத்திற்கு தண்டனையாக மரணதண்டனையை விதித்து நிறைவேற்றும் பொழுது, மனித உரிமை நிறுவனங்கள் சில அதைத் தவறாக விளங்கிக்கொண்டு எம்மை விமர்சிக்க முனைகின்றன; அரசியற் கருத்து வேறுபாடுகளுக்குப் புலிகள் தேசத் துரோகம் எனப் பெயர் சூட்டி மரண தண்டனைக்குட்படுத்துகின்றார்கள் என, பிழையாக அர்த்தம் கற்பிக்கின்றன. எமது மக்களிற் சிலரும், இதை விளங்கிக் கொள்ளாது ஆமோதிக்கின்றனர்.

ஆனால், உண்மை அப்படியல்ல. அரசியற் கருத்து வேறுபாடென்பது வேறு; தேசத்துரோகம் என்பது வேறு.

நாங்கள் அரசியற் கருத்து வேறுபாடுகளை வரவேற்கின்றோம்: அவற்றுடன் கருத்துப் போராட்டத்தை நடாத்த நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் எமது விடுதலைப் போராட்டத்திற்கு, எமது தேசியத்திற்கு, எமது மக்களிற்கு எதிராக எதிரியுடன் சேர்ந்து செய்யப்படும் தேசத் துரோகங்களுக்கு, உரிய தண்டனையை வழங்கியே தீருவோம்.

அதன்மூலம் எமது விடுதலைப் போரை வளர்த்துச் சென்று, தமிழீழத் தனியரசை நிறுவி, எமது மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றவே பாடுபடுவோம். ✲

# தியாக வாளைத் தூக்கு

உயிர் நீர்க்குமிழி போன்றது ; ஒருநாள் உடைந்துபோகும்.
செல்வம் சகடக்கால் போன்றது; ஒருநாள் ஏறும், மறுநாள் தாழும்.

மான உணர்வைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்
சாவின் பின்னாலும் அது உன்னை வாழ வைக்கும்.
சாவுக்குப் பயந்து ஓடிக் கொண்டிரு,
அது உன்னைத் துரத்திப் பிடிக்கும்.
சிறிது திரும்பி முறைத்துப் பார்!
சட்டென்று காலில் விழுந்துவிடும்.
பயந்தவனுக்குச் சாவு என்பது முடிவுரை.!
துணிந்தவனுக்கு அதுவே முகவுரை.
சாவுக்குத் தோற்பது இழிவு...
சாவைத் தோற்கடி...
அதுதான் மானத்தின் வாழ்வு.
மானத் திவட்டியைத் தூக்கிக்கொள்
மரணம் மண்டியிட்டு வணங்கும்;
தியாக வாளைத் தூக்கிக்கொள்
திக்குகள் வளைந்து புகழ்பாடும்.

## பாவற்குளம்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுசி மாமாவின் உடல்...... அவனால் தாங்க முடியவில்லை; நம்பவும் முடியவில்லை. அழுதான்; இயன்றவரை அழுதான். வளர்ந்தவன்தான்; நீண்ட போராட்ட வாழ்வில் அடிக்கடி இழப்புக்களைச் சந்தித்தவன்தான். ஆனாலும் கண்ணீர் அவனுக்குக் கட்டுப்பட மறுத்தது. டேவிட் மட்டுமல்ல எல்லாத் தோழர்களுமே, ஏன் அந்த மண்ணே அன்று கண்ணீரால் நனைந்து போனது.

சுசி மாமாவின் பிரிவைத் தாங்க முடியாமல் டேவிட் தவித்தான். அவனுக்கு கிராமத்திற்குப் போக வேண்டும் போல் இருந்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து திரிந்த வயல் வெளிகள், முன்பொரு காலத்தில் தண்ணீர் புரண்டு பாய்ந்த வாய்க்கால்கள், தற்போது இராணுவ முகாமாய் மாறியிருக்கும் பாடசாலை எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது.

'சுசி மாமாவின் இழப்பைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்றால், எங்காவது இராணுவத்தினருக்கு நல்லதொரு அடி கொடுக்க வேணும்.'

அவன் முடிவெடுத்துக் கொண்டான். நீண்ட காலமாகத் தான் பாதுகாத்து வைத்திருந்த சுசி மாமாவின் படத்தைத், தன் தோழன் ஒருவனிடம் கொடுத்தான். அந்தப் படம் எப்பவோ நீண்ட நாட்களுக்கு முன்பு எடுத்தது. ஆனாலும் சுசி மாமா அதில் தெளிவாக இருந்தான்.

'' இந்தப் படத்தைப் பெரிசாக்கி சுசிக்குச் சுவரொட்டி அடியுங்கோ.''

அவன் சொல்லிவிட்டு ஏதோ சிந்தனையில் சிறிது நேரம் இருந்தான்.

'' ஆனா ...... இதைப் பார்க்கிறதிற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியவில்லை. ''

அவன் சிரிக்க முயன்று தோற்றுப்போய்த் திரும்பி நடந்தான்.

.......

டேவிட் தன் தோழர்களுடன் சண்டைக்குப் புறப்பட்டான்.

சிப்பிக்குளம் — சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இன்னொரு தமிழ்க் கிராமம். சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக மீண்டும் ஓர் சண்டை — இப்போது டேவிட்டின் தலைமையில் நடந்தது.

அந்தச் சண்டையின் பின்பு — தோழர்கள் முகாமிற்குத் திரும்பிக்கொண்டு இருந்தார்கள். அவர்களின் கைகளில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இருந்தன.

ஆனால், அவர்களில் ஒருவன் டேவிட்டின் உடலையும் சுமந்து வந்தான்.

— ஜெயம் ✲

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்